The
Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே
ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11–16).

புத்தகம் 18. | செப்டெம்பர் 1920. | இலக்கம் 9.

MARIAN CONGRESS AND PROCESSION.
மரியாயின் மகா சங்கமும் சுற்றுப்பிரகாரமும்.

இம்மாதம், பொதுவாய் சுற்றுப்பிரகாரத்தைப் பற்றியும், சிறப்பாய் சமீபத்தில் வரவிருக்கும் மரியாயின் மகா சங்கத்தின் சுற்றுப்பிரகாரத்தைப்பற்றியும் ஒருவாறு எழுத எண்ணங் கொண்டோம்.

நமது சத்திய திருச்சபை யாசாரங்களில் சுற்றுப்பிரகாரம் செய்தலானது பெரிதும் பூசிக்கத்தக்கதும், பெரும் பலன் தரத்தக்கதுமான சுகிர்த முறைமையாகும். சுற்றுப்பிரகாரம் செய்தலானது மிகப் புராதனமான ஏற்பாடு. இசரவேலர் காலத்தில், உடன்படிக்கையின் பெட்டகத்தைக் குருக்கள் கொண்டுசெல்ல, அவர்கள் ஜெரிக்கோ நகரத்தைச்சுற்றி ஏழு நாள் சுற்றுப்பிரகாரஞ்செய்தார்கள். அதன் பயனாக ஏழா நாள் அந்நகரத்தின் மதிற்சுவர்கள் தகர்ந்துவிழ, இசரவேலர் அதினுட் புகுந்து அதைக் கைப்பற்றலானார்கள். தாவீது இராஜாவும் உடன்படிக்கைப் பெட்டகத்தை பூச்சியத்துடன் சுற்றுப்பிரகாரமாய் ஜெருசலேம் நகரத்துக்குக் கொண்டுபோகச்செய்தாரென்று அரசர் ஆகமம் இரண்டாவது புத்தகம் 6-வது அதிகாரத்தில் வாசிக்கிறோம். ஜெருசலேம் நகரில் தேவாலயங் கட்டி முடிந்தபிறகு மேற்சொன்னதைவிட அதிக பூச்சியமானதோர் சுற்றுப்பிரகாரம் நடந்தது. அதாவது: பலிபீடத்திலிருந்த உடன்படிக்கைப் பெட்டகத்தையும், பூசாபாத்திரங்கள் முதலியவற்றையும் குருக்கள் பயபக்தியுடன் எடுத்துச் செல்ல, சலமோன் இராசாவும் அவர் பரிவாரங்களும் அவரோடு முன்போக, மகா கம்பீரமான சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. புதிய ஏற்பாட்டிலும், நமதாண்டவராகிய சேசுக் கிறீஸ்துநாதர் தாம் பாடுபடுவதற்குமுன் ஜெருசலேம் நகருக்கு எழுந்தருளினபோது ஜனங்கள் கிளைகளையும், குருத்துக்களையுங் கொண்டு ஒட்டோலகமாய் உடன்சென்று செய்த சுற்றுப்பிரகாரத்தைவிடச் சிறந்ததும், மேலானதும் வேறுண்டோ?

இத்தகைய சுற்றுப்பிரகாரங்களின் பயன்தான் என்னவென்றாலோ, "ஆண்டவரே! உமது இஸ்பிரீத்துக்கு மறைவாக நானெங்கே போவேன்! உம்முடைய சமுகத்தைவிட்டு நானெங்கே ஒளிவேன்! நான் வானத்தில் ஏறினால் நீர் அங்கே வீற்றிருக்கிறீர்; நான் பாதாளத்தில் இறங்கினால் அங்

கேயுமிருக்கிறீர். நான் விடியற்காலத்தில் செட்டைகளை யெடுத்துச் சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே தங்கினாலும், அங்கேயும் உமது கை யென்னை நடத்திக்கொண்டு போம்; உமது வலதுகரம் என்னைத் தாங்கி நடத்தும்" என்று (தாவீது இராசா சங். CXXXVIII. 7–10) வசனங்களில் சொல்லியிருப்பதுபோல, இவ்வுலக முழுமையும் சர்வேசுரனுடைய இல்லமாயிருத்தலாலும், அவர் எங்கும் வியாபித்திருத்தலாலும், சர்வேசுரனை வணங்கித் துதித்தலே சுற்றுப்பிரகாரத்தின் கருத்தா மென்க. சர்வேசுரனுடைய மகிமையையும், நன்மைத்தனத்தையும் எவ்விடத்தும் போற்றிப் புகழ்தற்கும்; தனிமையிலும் வெளியரங்கத்திலும், உள்ளிலும் வெளியிலும், மனோ வாக்குக் காயங்களினால் செய்யப்பட்ட எண்ணிலடங்காத தேவதுரோகங்களுக்கு ஒருவாறு பகிரங்கப் பரிகாரஞ்செய்தற்கும்; உலகத்திலுள்ள சகலமும் சர்வேசுரனுடைய ஆசீர்வாதத்தினாலுண்டானவையென்னும் உண்மையைப் பற்றி உலகத்துக்கு சாட்சி பகர்வதற்கும் சுற்றுப்பிரகாரம் ஏற்ற சாதனமாயிருத்தலால், அது கிறீஸ்துவர்களால் பெரிதும் பூசித்து ஆசரிக்கப்படத்தக்கதாம் என்பதற்குச் சற்றேனும் சந்தேகமில்லை.

மேலும், சுற்றுப்பிரகாரங்கள் பெரும்பாலும் கோவில்களிலிருந்து, அதாவது தேவ ஊழியத்துக்கு மத்தியஸ்தானமும், செபதபங்களெல்லாம் பெறுமதியையும் பலன்களையும் அடைகிற ஊற்றுமாகிய திவ்ய பலிபீடத்திலிருந்து புறப்பட, திருச் சிலுவை ஆதியாகக் கொடிகள், துவஜங்கள், மெழுகு வத்திகள், தூபதீபங்கள் துலங்க, முதலில் சிறுவர் சிறுமியர், பிறகு கன்னியர், குருக்கள், மற்ற கிறீஸ்துவர்களாதியோர் பக்தியுடன் பொதுச் செபங்கள் செய்துகொண்டும், திருப்பாடல்கள் பாடிக்கொண்டும் விமரிசையுடன் வரிசை வரிசையாய் இவர்ந்து செல்லும் அரிய காட்சியானது, பார்ப்போருக்கு பக்தியையும், நன்மாதிரியையும் உண்டுபண்ணுகிறதுந்தவிர, சுற்றுப் பிரகாரத்தோடு செல்லும் ஒவ்வொருவருடைய மனத்தையும் தேவனிடம் உயர்த்தி அவர்களெல்லோரையும் அவரோடு ஐக்கியப்படுத்திவிடுகிறது. ஆதலினால், தேவ கிருபையையும், சகாயத்தையும் அடைவதற்கு, சுற்றுப்பிரகாரம் சித்திகரமானதோர் சாதனமன்றோ?

ஆகவே, திருச்சபையானது சர்வேசுரனிடத்தில் யாதோர் விசேஷ உதவி, சகாயம் வேண்டும்போதாவது, அல்லது அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்த வேண்டியபோதாவது, அந்தந்த விடத்திலும் சந்தர்ப்பத்திலும் சம்பந்தப்பட்ட கிறீஸ்துவ விசுவாசிகள் அனைவோரையும் ஒருங்கு கூட்டி, சுற்றுப்பிரகாரஞ்செய்யும் சுகிர்த வழக்கத்தைப் பெரிதும் பாராட்டி, தொன்று தொட்டு அதை அநுசரித்துவந்திருக்கிறது.

இந்த சுகிர்த வழக்கத்தை யநுசரித்தே சென்னைமாநகரில் சமீபத்தில் கொண்டாடப்படப்போகிற மரியாயின் மகா சங்கத்தின் சம்பந்தமாய், பிரமாண்டமானதோர் சுற்றுப்பிரகாரம் நடப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சுற்றுப்பிரகாரத்தைப்பற்றி சென்ற மாதச் சஞ்சிகைகளில் ஒருவாறு குறிப்பித்திருந்தாலும் அதைப் பின்னும் ஒரு சிறிது இங்கு விவரிக்க விரும்புகிறோம். இந்த மகா சங்கமானது, இந்தியா, பர்மா இலங்கையாகிய மூன்று நாடுகளைச்சேர்ந்த கத்தோலிக்குக் கிறீஸ்துவ விசுவாசிகளால் ஏகோபித்துச் செய்யப்படுகிற மகத்தான அபூர்வ ஏற்பாடு. இதுவரையிலும் இந்த மூன்று தேசத்தவர்களும் ஒன்றுசேர்ந்து எந்தக் கருத்துக்காகவும் இவ்வளவு உற்சாகமாக உழைத்ததேயில்லை. இந்த மூன்று நாடுகளிலுமுள்ள கத்தோலிக்கரின் தொகை 25 லட்சத்து முப்பத்து நாலாயிரமாகிறது. இவர்களில், சராசரி ஆயிரத்துக்கு ஐந்து பேர் விழுக்காடு இந்த மகா சங்க வைபவத்துக்கு வருவார்களென்று நிதானமாய்க் கணக்கிட்டுப்பார்த்தபோதிலும், குறைந்தது பன்னீராயிரம் கத்தோலிக்கர்கள்வந்து குழுமிவிடுவார்கள் எனச் சொல்லலாம். இந்தத் தொகையில், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், இந்தியர், குருக்கள், சந்நியாசிகள், கன்னியர்கள், மற்றக் கிறீஸ்துவர்கள், ஸ்திரீ புருஷராகிய எல்லோருமே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பன்னீராயிரவர்களில், அசௌக்கிய முதலிய அசௌகரியங்களை முன்னிட்டு ஆஜராகக்கூடாதவர்களைத் தள்ளி சுமார் பத்தாயிரம் விசுவாசிகள், மரியாயின் மகா சங்க சுற்றுப் பிரகாரத்தில் சேர்ந்துகொள்வார்களென்று ஒருவாறு எதிர்பார்க்கலாம். இந்த 10,000 பேர்கள் ஒரு வரிசைக்கு நாலு பேர் விழுக்காடு ஒழுங்காக நிற்பார்களேயானால்,

சுற்றுப்பிரகாரம் சுமார் இரண்டுமயில் தூரத்திற்கு நீண்டுநிற்கும். அதாவது, மயிலாப்பூர் அர்ச். தோமையார்கோவிலிலிருந்துசென்னை செண்ட் ஜார்ஜ் கோட்டைவரையிலும் நிற்கலாம். இந்தச் சுற்றுப்பிரகாரத்தில் எத்தனை சபைகள், எத்தனை பங்குவிசாரணைகள், எத்தனை பஜனைகள், எத்தனை பக்த ஜனக்கூட்டங்கள் சேர்ந்துவருமென்று இவ்வளவு சீக்கிரத்தில் திட்டமாய்ச்சொல்ல இயலாது. ஆயினும் அவர்களை நூற்றுக்கதிகமாய்த்தான் மதிப்பிடவேண்டும். ஏற்கெனவே நாம் குறிப்பித்திருக்கிறபடி, அர்ச். பாப்பானவரின் ஸ்தானாதிபதியாகிய மக. வந். பீட்ரோ பைசானி ஆண்டவரவர்கள் ஷெ வைபவங்களில் சபாநாயகம் வகிக்க, 40க்கு அதிகமான அதிமேற்றிராணிமார்களும், மேற்றிராணிமார்களும், நூற்றுக்கணக்கான குருமார்களும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரீகள், நவ சந்நியாசிகள் நவ கன்னியாஸ்திரிகளும், அவரவர்களும் தம்தம் சபை அந்தஸ்துக்குத் தக்க உடைகளை உடுத்துக்கொண்டு ஜெபமாலைகள் ஏந்திக்கொண்டுபோவார்கள் பள்ளிச்சிறுவர்கள், சிறுமிகள் ஒரு கூட்டம், வாலிபச் சங்கங்கள், சபையினோர் ஒரு கூட்டம், மடத்துப் பிள்ளைகள் ஒரு கூட்டம், பங்கு விசாரணைக் கிறீஸ்துவர்கள், ஆடவர்கள் அரிவையர்கள் ஒரு கூட்டம், ஆக இத்தனை கூட்டங்களும், சபைகளும், விசாரணைகளும் தங்கள் தங்கள் சபைக்கொடிகளுடனும்,விருதுகளுடனும் ஒழுங்காய், அமைதியாய் அடிமேல் அடிவைத்து, பக்தியோடு ஜெபித்துக்கொண்டும், இடையிடையே தேவதோத்திரக் கீதங்களைப் பாடிக்கொண்டும் போகும் மகத்தான காட்சியின் மாட்சியைப்பற்றிச் சொல்லுந்தரமல்ல.

ஆகவே, கிறீஸ்துவர்கள் ஒவ்வொருவரும், அர்ச். கன்னிமரியாயின் மக்கள் என்ற பேர்கொண்டவர்களெல்லோரும், அர்ச். மரியாயின் நாமத்தைக்கொண்ட பக்திச் சபையோர்கள் அனைவரும், சுருக்கிச்சொல்லுமிடத்து மரியாயின்மேல் பக்தியுள்ளவர்கள் ஒவ்வொருவரும் இந்த மரியாயின் மகா சங்கத்தின் மாட்சிமையைக் கண்டுகளிக்கப் பிரயாசைப்படுவார்களாக. இந்த மாதிரியான மகா சங்கம் இனிமேல் நெடுங்காலத்துக்கு கூடுவது சாத்தியமல்ல. ஆகவே, கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களெல்லோரும் இவ்வரிய சம்பவத்தைக் கைநெகிழவிடார்களென நம்புகிறோம். இப்படிப்பட்ட மகத்தான கூட்டத்தினால், பிற மதஸ்தருக்கு கத்தோலிக்கு வேதத்தின்மட்டில் ஒரு நல்ல மதிப்பும், பற்றுதலும் உண்டாகும். சர்வேசுரனுடைய சித்தத்தினால் இதன் காரணமாக அஞ்ஞானிகளில் அநேகர் மனந்திரும்புவதற்கும் இடமாகலாம். கிறீஸ்துவர்களுக்குள்ளும், பாவிகளுக்கடைக்கலமும், கிறீஸ்துவர்களுடைய சகாயமுமாகிய அர்ச். கன்னிமரியாயின்மேல் பூரண பக்தியில்லாத வெதுவெதுப்புள்ளவர்களுக்கும் அவ்வாண்டவள்மேல் பக்தி அதிகரிக்கலாம். இத்தகைய ஞான நன்மைகளும் ஞான ஆறுதலும் தரக்கூடிய மரியாயின் சங்கத்தைச் சகலரும் சாலப் போற்றி, இது தங்கள் ஆயுள் காலத்தில் நடந்த அல்லது நடக்கப்போகிற மற்றெல்லாச் சம்பவங்களுள் மிகப் பெரிதும், அரிதுமானதெனக் கருதி,சென்னைக்கு வந்து, அது சம்பந்தமாய் நடைபெறப்போகிற பக்திக்குரிய ஆராதனைகளையும், மகத்தான சுற்றுப்பிரகாரத்தின் சிறப்பையும், ஆரவாரத்தையும் தரிசித்து ஞானனந்தமடைவார்களெனக் கோருகிறோம்.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XVI

சலமோனின் உன்னத சிம்மாசனம்.

“சலமோன் இராசா தந்தத்தினால் பெரிய ஓர் சிம்மாசனத்தைச் செய்வித்து அதைப் பசும்பொன் தகட்டால் மூடினர்” (3 அரச. X. 18).

அரசராகமம் 3-ம் புத்தகத்தில் சலமோன் இராசா ஓர் சிம்மாசனத்தைச் செய்வித்து அதைப் பசும்பொன் தகட்டால் மூடினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அச்சிம்மாசனத்திற்கு ஆறு படிகளிருந்தன. சிம்மாசனத்தின் சிகரம் பின்புறம் வளைவாயிருந்தது. ஆசனத்திற்கு இருபுறமுங் கைச்சாய்மானங்களிருந்தன. கைச்சாய்மானம் ஒவ்வொன்றினருகே ஓரோர் சிங்கம் நின்றது.

ஆறு படிகளின்மேல் பக்கத்திற்கு அவ்வாறாக பன்னிரண்டு சிங்கக்குட்டிகள் நின்றன. எந்த இராச்சியத்திலும் இப்பேர்ப்பட்ட வேலை செய்யப்படவில்லையாம்.

1. மேற்கூறிய வசனங்களை வியாக்கியானித்த முத்திப்பேறுபெற்ற பெரிய அல்பர்த் என்பவர் அடியிற்கண்டவாறு சொல்லுகிறார்:—இரக்கத்தின் தாயாகிய கன்னிமரியாய் உலகத்திற் தோன்றியகாலையில் கடவுளாகிய சலமோன் இராசா சிம்மாசனமொன்றைச் செய்வித்தனர். அதைக் கற்புந் தூய்மையுமாகிய தந்தத்தால் அமைத்தார். இயற்கையிலும் அருளிலும் மகிமையிலுந் தயையிலுந் தாழ்மையிலுந் தாராள குணத்திலும் அழகிலும் பெரியதாகப்பண்ணினார். அதை முற்றிலும் இராஜரீகமாய் மற்ற சிருஷ்டிகளுக்குச் செய்ததைவிட மேலாக அன்பெனும் பசும்பொன் தகட்டால் மூடினார். தாழ்ச்சி, கன்னிமை, தாரித்திரம், நாணம், பொறுமை, மட்டசனம் எனும் ஆறு படிகள் அங்கிருந்தன; அவள் பரலோக காரியங்களில் வைத்த அவாவைக்காட்ட சிம்மாசனத்தின் சிகரம் பின்னாக வளைந்திருந்தது. மரியாயினிடத்துள்ள அச்சமும் வணக்கமும் உட்காருமிடத்தைத் தாங்கி நின்ற இரு கைச்சாய்மானங்கள். சேசுநாதர்மட்டில் மரியாய்க்கு மெய்யாகவே அச்சமும் வணக்கமுமான உணர்ச்சியிருந்தது. ஏனெனில் அவர் அவளது குமாரனாயினும் அவளது ஆண்டவருங் கடவுளுமாயிருந்தாரன்றோ? இகலோக பரலோகமாகிய எந்த இராச்சியத்திலும் அதிசயத்துக்குரியதும், அழகுள்ளதும், விலையுள்ளதுமான இதைப்போன்ற வேலை செய்யப்படவில்லை.

2. இந்தச் சிம்மாசனத்தின்மீது அதிமிக்க ஞானமுள்ள அரசன் வீற்றிருந்தான். மரியாயினிடத்து ஞானத்தின் ஊற்றும் அரசர்களுக்கெல்லாம் ஞான மூட்டுபவனுமாகிய ஆண்டவரிருந்தார். ஆகவே 'ஞானத்தின் இருப்பிடம்' என்று மரியாய் திருச்சபையால் அழைக்கப்படுகின்றாள். சிம்மாசனத்தில் வீற்றிருந்தவர் சமாதானத்தின் இறைவன். ஏனெனில் 'சலமோன்' என்றால் சமாதானமுள்ளவனெனப்படும். மரியாயினிடத்து வீற்றிருந்தவர் மெய்யாகவே சமாதானத்தினரசர். ஏனெனில் தேவசுதன்தான் இவ்வுலகிற்கு மெய்யான சமாதானங் கொண்டுவந்தார். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே பாவத்தினிமித்தம் நேர்ந்த விரோதத்தைப் போக்கி, சமாதானத்தை நிலைநாட்டவந்தவர் அவரே! கன்னிமரியாய் வழியாய் அச்செயலைப் புரிந்தார். "பரிசுத்த மரியே கடவுளின் ஆசனம். அங்கிருந்து தேவன் தன் கோபத்தை வெளியிடமாட்டார். குற்றவாளிக்கு மரணதண்டனை உரைக்கார். ஆகவே, அவள் தேவாக்கினை நிறைவேற உடந்தையாகுஞ் சிம்மாசனமன்று. அதிலிருந்து கடவுள் தயையோடு சமாதான ஆட்சி புரிகின்றார். மரியாயின் மகனும் சேசுதேவன் தன் தாயின் பேறுபலன்களினிமித்தம் பற்பல நன்மைகள் ஈகின்றார். குற்றவாளிகளுக்குப் பொறுத்தலையும், பிடிபட்டோருக்கு விடுதலையும், குருடருக்குப் பார்வையையும், அலைவோருக்கு இளைப்பாற்றியையும், வியாதிக்காரருக்கு ஆரோக்கியத்தையும், ஏழைகளுக்கு உபகாரத்தையும், அஞ்சுவோருக்குத் துணிவையுமளிக்கின்றார். நேசர்களுள் பிரமாணிக்கத்தையும், விரோதிகளிடத்துச் சமாதானத்தையும் நிலைநாட்டுகிறார். தப்பறைகளை நீக்கிச் சந்தேகத்தைப் போக்கித் தெளிவுறுத்துகிறார். அவர்தான் துன்பத்தில் ஆறுதல், கஷ்டத்தில் உதவி, அல்லல்களில் அடைக்கலம். கஸ்திக்கடலில் தத்தளிக்கையில் துறைமுகம். அறிவிலிகளுக்கு ஞானம்; தாழ்ச்சியுள்ளோருக்கு மகிமை. புண்ணியவழி நாடிச்செல்வோருக்கும், அதில் கடைசிவரையில் நிலைத்து மகிமை சீவியமும் நித்திய கிரீடமும் பெற முயல்வோர்க்கும் ஒருள் அவர்தான்" என ப்லூவா இராயப்பர் பகர்கின்றார்.

3. சலமோனின் சிம்மாசனம் தந்தத்தால் உண்டாக்கப்பட்டது. தந்தம் விலையுயர்ந்த பொருளாதலால், அதைத் தெரிந்தெடுத்தார். சேசுநாதர்சுவாமி வீற்றிருக்க தெரிந்துகொண்ட சிம்மாசனமாகிய கன்னிமரியாயி மனுமக்களில் சாதாரணமானவளா? ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளன்றோ? மாசுபடிந்த மானிட சந்ததியில் படிநின்றிப் பளபளப்பாயிருப்பவளன்றோ? விலைமதிக்கப்படாத இக்கன்னிகையையே தேவசுதன் தம் சிம்மாசனமாகத் தெரிந்துகொண்டார். தந்தம் வெண்ணிறமானது, உறுதியானது. குளிர்ச்சிபொருந்தியது. வான்தூதர்களையும் பரவசமாக்கும் மரியாயின் கன்னிமை, கற்பு, பரிசுத்ததனம் ஆகிய திருமணிகளையும்விட தூய்மைபொருந்தியது யாது? மரி

யாய் பலசாலி. அவள்மூலமாக ஆண்டவர் 'பலசாலியை' ஜெயித்து, 'அவன் நம்பியிருந்த ஆயுதங்களையும் பறித்துவிட்டார்' (லூக். XI. 12). கன்னிமரியாய் தேவ அருளால் எவ்வளவு குளிர் பொருந்தியிருந்தனளென்றால் பாவச்சூடென்கிலும், ஆசாபாச அக்கினியென்கிலும் அங்கே கிட்டவில்லை. தந்தமானது சதையில்லா எலும்பு. மரியாய் சரீரத்தோடிருந்தும் அதில்லாதது போல் சீவித்தாள். தந்தமானது தோலில்லா எலும்பு. மரியாய் தோல்போன்ற உலகத்தையும் அதன் ஆரவாரங்களையும் வெறுத்தனள். தந்தமானது மயிரில்லா எலும்பு. மரியாய் தாரித்திரத்தை விரும்பி உலக பொருட்களைத் துறந்தாள்.

4. சலமோன் இராசா பெரிய ஓர் சிம்மாசனத்தைச் செய்தார். கன்னிமரியாயைவிடப் பெரிய சிம்மாசனமுளதோ? வானமே கொள்ளக்கூடாத தேவன் அவளிடமிருந்தார். தமது மகத்துவத்தாலும் பெரியவள் மரியாய். ஏனெனில் நவவிலாச சம்மனசுக்களையும்விட மகிமை பெற்றவள் மரியாய். சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களெல்லாம் அவளுக்குக் கீழ். சிருஷ்டிகர் ஒருவர்தான் அவளுக்கு மேல்.

5. சிம்மாசனம் பசும்பொன் தகட்டால் மூடப்பட்டிருந்தது. பொன்னானது லோகங்களில் விலையேறப்பெற்றது. கன்னிமரியாயை மூடியிருந்த பொன்னோ சகல புண்ணியங்களிலும் மேலான தேவ சிநேகம். இச்சிநேகம் மரியாயை எங்ஙனம் பற்றியிருந்ததென்றால் அவள் நெருப்புமயமான சிம்மாசனம்போலிருந்தாளென அர்ச். இல்போன்சுஸ் சொல்லுகிறார். "என்னாண்டவரில் அடங்கா சந்தோஷங் கொண்டாடுவேன். என் தேவனிடத்தில் என் ஆத்துமா அக்களிப்புக்கொள்ளும். ஏனெனில் அவர் எனக்கு இரட்சண்ணியத்தின் வஸ்திரத்தைத் தரித்து, நீதியின் உடுபாவனையால் என்னைச் சோடிப்பார்" (இசயாஸ் VI. 1–10) என்று இசயாஸ் தீர்க்கதரிசியோடு மரியாய் நன்கு விளம்பலாம்.

6. ஆசனத்தில் அமர ஆறு படிகள் ஏறவேண்டும். மோக்ஷ இராக்கினியாய் பரத்திலிருக்கும் மரியாயைக்கண்டு களிகூறவும் ஆறு படிகள் ஏறவேண்டும். ஞானக்காரியங்களைப்பற்றி சதா தியானிப்பது முதல் படி. நாவினால் ஞான விஷயங்களையே எப்போதும் பேசுவது இரண்டாம் படி. நியாயமானதையும் ஒழுங்கானதையுஞ் செய்வது மூன்றாம் படி. தவறினோரை நல்வழிப்படுத்துவதும், கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அளிப்பதும் நான்காம் படி. உலகத்தையும் அதன் ஆரவாரங்களையும் விட்டுவிடுவது ஐந்தாம் படி. ஞான முயற்சியில் நிலைத்திருக்கப் பிரயாசிப்பது ஆறாம் படியாம். ஒன்றன்பின் ஒன்றாய் அந்த ஞானப்படிகளிலேறிச்செல்ல மரியாயெனுஞ் சிம்மாசனத்தை நேரே கண்டு அதின் ஆனந்தத்தைச் சுகிப்போம்.

7. சிம்மாசனத்தின் சிகரம் பின்புறம் வட்டமாயிருந்தது. வட்டத்தில் துவக்கமுந் தோன்றாது முடிவுந் தெரியாது. அது மரியாயின் மோக்ஷ ஆனந்தத்தின் அறிகுறி. அவள் பரலோகஞ்சென்றதும் அங்கு சகல ஆனந்தத்திற்கும் பங்காளியானாள். அவ்வானந்தத்திற்குத் துவக்கமுமில்லை முடிவுமில்லை.

8. பன்னிரு சிங்கக்குட்டிகள் படிகளில் நின்றன. இவைகள் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் குறிப்பிடுகின்றன. முன்னற் கூறிய ஆறு படிகளின் வழியாய் ஏறி இப்போது கன்னிமரியாயைக் கண்டுகளிக்கின்றனர். இரு கைச் சாய்மானங்களும் மரியாயின் இல்லற வேலைக்கும் ஞான தியானத்திற்கும் அடையாளமென்னலாம். இரண்டு காரியங்களும் எவ்வண்ணம் ஒன்றித்திருந்ததென்றால், ஒன்றுக்கொன்று முரணாக இருக்கவில்லை. தாம் இல்லற வேலையைச் செய்தபோதிலுந் தியானிப்பதை விட்டுவிடவில்லை. கடவுளைத் தியானஞ்செய்வதைத் தலைமேற்கொண்டாளாயினும் தனதில்லறக் கடமைகளில் அசட்டையாயிருந்தனளல்ல.

9. சிம்மாசனத்தின் இரு புறமுஞ் சிங்கங்கள் இரண்டு வைக்கப்பட்டிருந்தன. இவைகள் கன்னிமரியாயைக் காத்துவந்த இரு தூதர்களுக்குவமானம். ஒருவர் கபிரியேல் சம்மனசானவர். அவர் மரியாயின் ஆத்துமாவிற்குக் காவலாய் நின்றார். மற்றவர் அர்ச். அருளப்பர். அவர் தேவமாதாவின் சரீரத்தைக் கவனித்துவந்தார். இருவரும் மரியாயை புகழ்ந்துகூறியதால் பலரும் அறிய சிங்கத்தைப்போல் கர்ஜித்தனரென்னலாம். "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே, கர்த்தர் உம்முடனே!" என்றார் ஒருவர். மற்றவர் சேசுநாதர் திருவாய்மலர்ந்தரு

ளிய "இதோ உன் தாய்" என்பதைப் பறைய றைந்துள்ளார்.

10. "இதைப்போன்ற வேலை எந்த இராச்சியத்திலுஞ் செய்யப்படவில்லை." சலமோன் சிம்மாசனத்தைப்பற்றி யிவ்வாறு கூறியது உண்மையே. கன்னிமரியாயைப்பற்றி அப்படி கூறுவது உண்மையிலுமுண்மையாம். கடவுள் தனது திருக் கரங்களால் பல கோடி வகைவகையான வஸ்துக்களை சிருஷ்டித்தார். அவைகளின் தன்மை வரையறுக்கக்கூடாதவை. ஆனால் அவைகளையெல்லாம்விட மேலாக ஒரே சிருஷ்டியை உருவாக்கினார். அதற்கிணை எங்கும் கிடையா. அதுவே கன்னிமரியாய்.

அத்தாயினிடம் விசுவாசத்தோடு ஓடிப்போவோம். அருட்சிம்மாசனத்தினருகே அண்டுவோமாக! வரப்பிரசாதத்தின் தாய் அவளல்லவோ? கன்னித்தாயின் சலுகையைத் தெடுவோமாகில் நமக்குத் தயவும் கிருபையுங் குறையாது கிடைக்கும்.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

8-ம் அதிகாரம்.

அகுஸ்தீன் உரோமாபுரிக்குப்போய் அங்கு வியாதிப்படுவது—மோனிக்கம்மாள் அவருக்காக சிந்திய கண்ணீர்களின் பலன்—இதுவரையில் நேர்ந்த கண்டங்களைவிட பயங்கரத்துக்குரியதான ஒரு புதிய கண்டம்—சர்வழம் சந்தேகமே—தன் மகனுக்குத் தஞ்சமாக மோனிக்கம்மாள் தீவிரித்துப்போவது.

அகுஸ்தீன் தன் தாயாருக்கு எழுதிய கடிதத்தில், தான் கார்த்தேஜ் நகரைவிட்டு உரோமாபுரிக்குப் போவதாகவும், அங்கு போனால் கீர்த்தியடையவும், திரவிய சம்பன்னராகவும் கூடுமாயிருக்குமென்றும், தன் தோழர்கள் சில நாட்களாய்த் தனக்கு வற்புறுத்தி யோசனை கொடுத்துவருவதாகவும், ஆதலால் தான் அப்படியே போய் அங்கு நிலையாய் குடியிருக்கத் தீர்மானித்ததாகவும், எழுதியிருந்தார். சீருஞ்சிறப்புமடைந்து ஐஸ்வரியவானாக, தனக்கு ஒருவாறு ஆசையிருந்தபோதிலும், அவர் கார்த்தேஜ் நகரைவிட்டு உரோமைக்குப்போக, அதுவே ஒரு முக்கியமான காரணமன்று. உண்மையான காரணமேதெனில், கார்த்தேஜ் நகரிலிருந்த மாணாக்கர்களிடம், அவர் கண்ட மூர்க்க குணத்தையும், அடங்காமையையும், தூர்த்தத்தனத்தையும் பொறுக்க அவரால் முடியவில்லை. அதற்கு மாறாக, படிப்பின்மட்டில் அதிக கவனமும், பெரியோர்கள்மட்டில் அதிக வணக்கமும், தனக்குப் பிரியமான இலக்கியம், தத்துவசாஸ்திரம் ஆகிய இக்கலைக்கியானங்களின்மட்டில், அதிக மனவிருப்பமுள்ள மாணாக்கர்கள், உரோமாபுரியிலிருப்பார்களென்று நம்பினார்.

இப்படிப்பட்ட நற்கருத்துடன், அவர் உரோமாபுரிக்குப் போகிறாரென்பது பிரத்தியட்சமாயினும், தன் மகன் எழுதிய கடிதத்தை வாசித்ததும், மோனிக்கம்மாளுடைய இருதயம் சிந்தாகுலமடைந்தது. தன் மகனைவிட்டு தனித்திருப்பது, தனக்கு மெத்த விசனமேயாயினும், இதுவரைக்கும் அவர் வாசமாயிருந்த கார்த்தேஜ் பட்டணம், தான் வசித்திருந்த நகருக்கு அருகிலிருந்தபடியால், ஏதோ ஒரு அவசரமான வேளையில், அவருக்குச் சகாயமாக ஓடக்கூடுமென்று, அவள் இத்தனைகாலம் ஒருவாறு தன் விசனத்தை ஆற்றிக்கொண்டுவந்தாள். ஆனால், அவர் உரோமாபுரிக்குப் போகிறாரென்பதை செவியுற்றதும் திடுக்கிட்டாள். அப்படி அவர் போவாரென்று ஒருபோதும் அவள் நினைத்தவளேயல்ல.

உரோமாபுரியின் அக்காலத்து நிலைமைக்கும், அதற்குப் பிந்தினகாலத்து நிலைமைக்கும் வெகு வித்தியாசம். இன்னும் அது அவ்வளவு அழகிய சித்திரந்தீர்த்த படங்களும், இது என்ன அதிசயமென்று ஒருவன் அண்ணாந்துபார்க்க வேண்டிய மச்சுமாளிகைகளும் அடங்கப்பெற்ற திருநகரமாகவில்லை. பலவிதமான கவலைகளால் மனம் நொந்திருக்கும் நாம், அத்திருப்பதிக்குப் போயல்லவோ, உலகத்தை மறந்து, பழய சாசனங்களையும், ஆதிகாலத்து கிறீஸ்துவர்களின் சீவிய நடவடிக்கை விவரங்களையும் கண்டு, நமது மனதிலுண்டாகும் திவ்விய உணர்ச்சிகளால், ஞான ஆறுதலடைகிறோம். நாலாம் யுகத்தின் ஈறுந்தத்

162033

தில், உரோமாபுரியானது, கிறீஸ்துவர்களுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் எப்படிப்பட்ட நகரமாயிருந்ததென்றால், தேவ மக்களை வாதித்துக் கொல்லும் கொலைக்களமாகத்தான் இருந்தது. பாய்ந்து ஓடும் ஆற்றுக்கொப்ப, கிறீஸ்துவர்களின் இரத்தத்தை சிந்தி, கோடிக்கணக்கானபேர்களுக்கு, வேதசாட்சியின் வெற்றிக் குருத்தையளித்த, ராஜ கட்டளைகளின் உற்பத்திஸ்தானமதுவே. ஏறக்குறைய ஐம்பது வருஷம்வரைக்கும், எல்லா நாடுகளிலிருந்தும் அகற்றப்பட்ட அஞ்ஞானத்திற்கு உறைவிடமாயிருந்த பட்டணமதுவே. சிற்றின்ப சுகபோகத்திற்கும், அவலட்சண நாடகங்களுக்கும், பாவற்றிற் கேதுவான கூத்தாட்டங்களுக்கும், பேர்பெற்ற பதியுமதுவே. அந்தப் பட்டணமே ஜெரோமென்பவரை ஏறக்குறைய முழுதுமாய் கெடுக்க இருந்தது. அவர் வனவாசம்போய், மல்யுத்தக்காரனைப்போல், உலகம், பசாசு, சரீரத்துடன் போராடிவரும்போது முதலாய், அப்பட்டணத்தில் அவர் அனுபவித்த சோதனைகளை நினைத்தால், அவர் ஆத்துமம் கலக்கமடையும். தன் சோதனைகளை நினைத்து திகில்கொண்டு, அவர் உச்சரித்த உத்தமமனஸ்தாப முயற்சிகளை, இன்னும் கிறீஸ்துவர்கள் மறக்கவில்லை.

ஆதலால், அகுஸ்தீன் உரோமாபுரிக்குப் போகிறாரென்று அவர் எழுதிய கடிதத்தில் மோனிக்கம்மாள் வாசித்ததும், என்ன காரணத்தைப்பற்றி அவள் பயந்தாளென்று நாம் யூகித்துக் கொள்ளக்கூடும். அகுஸ்தீன் பத்தியுள்ளவராகவும், இருதய சுத்தமுள்ளவராகவும் இருந்து, ஏதோ ஒரு முகாந்தரத்தைப்பற்றி உரோமாபுரிக்குப் போவதாயிருந்தால், அப்போதுமுதலாய் அவள் பயந்தேயிருப்பாள். ஆனால் அவர் முற்றிலும் அவிசுவாசியாயும், ஆசாபாசத்திற்கு அடிமையாயுமிருக்கும்போது, உரோமைக்குப்போவது செங்குத்தான மலை உச்சியின் ஓரத்தில் நடந்து போவதற்குச் சமானமென்று நினைத்தாள். எதையும் தீவிர யுக்தியுடன் தீர்மானிப்பது அவள் வழக்கம். ஆகவே, அகுஸ்தீன் உரோமாபுரிக்குப் போகத்தகாதென்றும், அல்லது தானின்றி அவர் தனியே போகத்தகாதென்றுந் தீர்மானித்தாள். அங்கு அவருடைய ஆத்துமத்திற்கு நேரிடும் அபாயத்தில் அவரைத் தனியாய் விட்டுவிட அவள் மனம் எப்படித் துணியும்?

அகுஸ்தீன் இதையெல்லாம் நினைக்கவில்லை. அவர் உரோமைக்குப்போகவே விரும்பினர். அதுவும் தனியாய்ப் போகத்தான். ஒரு பிள்ளையின் சுகக்ஷேமத்திற்காக, அதன் தாயார் கூடவே இருக்கவேண்டிய அத்தியாவசியமான வயதை தான் கடந்துவிட்டாரென்பது அவர் எண்ணம். ஆனால் பிள்ளையானது தாயின் மூப்புப்பருவத்தை யோசித்து, இன்னும் கொஞ்சகாலத்தில் அவள் சாக நேரிட்டால், அதற்குப்பிறகு தனக்குத் தாய் ஏது? என்று எண்ணி, அவள் மட்டில் ஒருவிதமான வணக்கம் நிறைந்த புதிய நேசங்கொள்ளும்படியான வயது, இன்னும் அவருக்கு வரவில்லை. இப்போது அகுஸ்தீனுக்கு வயது முப்பது. ஆனால் நாம் குறித்துப் பேசும் பட்சபாசம், ஒரு பிள்ளையின் மனதிலுண்டாவது இப்பிராயத்திலல்ல. இருதயம் இன்னும் இளக்கமடையவில்லை. சரீரத்தில் இன்னும் இரத்தப் புஷ்டியுண்டு. அவர் வாலிபராயும், நெஞ்சுதீரமுள்ளவராயும், உலகத்தில் பேர்பெருமையுடன் வாழ்ந்துவரவேண்டுமென்னும் ஆவலுள்ளவராயுமிருந்தபடியால், தன் தாயாரை ஒரு கால்கட்டாகப் பாவித்து, அவளைத் தான் ஆசையுடன் நேசித்தபோதிலும், அவளை விட்டுவிட்டு தனியாகவே உரோமாபுரிக்குப்போகத் தீர்மானஞ்செய்தார்.

ஆனால், அவர் பிரயாணத்திற்குண்டான ஆயத்தங்களைப் போதிய தீவிரத்துடன் முஸ்திப்புசெய்து, உரோமாபுரிக்குப் புறப்படவில்லை. இதற்குள் மோனிக்கம்மாள் கார்த்தேஜ் நகரத்திற்கு வந்துவிட்டாள். வந்ததும், அகுஸ்தீனைத் தன் கரங்களில் தாவிப்பிடித்துத் தன் மார்போடணைத்து, உரோமாபுரிக்குப்போகும் எண்ணத்தை முழுதும் ஒழித்துவிடவேண்டுமென்றும், அல்லது தானுவது கூடவர சம்மதிக்கவேண்டுமென்றும், அழுகைப்பிரலாபத்துடன் அவரைக் கெஞ்சி மன்றாடினுள்.

அகுஸ்தீனோவெனில், அவளைச் சாந்தப்படுத்தும்படி, தான் கார்த்தேஜ் நகரை விட்டுவிட்டுப்போவதேயில்லையென்று வாக்களித்து, பயணத்திற்கு வேண்டிய பிரயத்தனங்களை இரகசியத்தில் செய்துவந்து, கடைசியாய் கப்பலேற வேண்டிய தருணம் வாய்த்தபோது, தன்னோடு கூட உரோமாபுரிக்குப்போக இருந்த சிநேகிதனைக் கப்பலேற்ற, சமுத்திரமட்டும் போய்வர வேண்டுமென்று அவளிடம் உத்தாரங் கேட்டார்.

அவளோவெனில் இதைக்கேட்டதும் என்னவோ ஏதோவென்று பயந்தாள். ஆனால் அகுஸ்தீன் தான் கார்த்தேஜ் நகரைவிட்டுப் போவதேயில்லை யென்று திருப்பித்திருப்பி அவளுக்கு உறுதி மொழியளித்து, கப்பல் புறப்பட்டுப்போனதும் வீட்டுக்கு வந்துவிடுவதாக ஒரே கண்டிப்பாய்ச் சொன்னார்.

இதைப்பற்றி அர்ச். அகுஸ்தீன் பிரலாபித்து சொல்லுவது :—

"தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச்சுடும்" என்பதை மறந்து, என் தாயாருக்கு—அப்படிப்பட்ட மாதாவுக்குப் பொய் சொன்னேன். ஆனால் என் கர்த்தாவே, மற்றப் பாவங்களைப் பொறுக்கும்போது, இப்பாவத்தையும் பொறுத்துக்கொண்டீர் என்று நம்புகிறேன்.

தானுரைத்த உறுதிச்சொல்லைக் கேட்டு, தன் தாயார் நகரத்திலேயே நின்றுவிடுவாளென்றும், சிநேகிதனை வழிவிட்டு வருவதாகப்போய் தானும் அவளுக்குத் தெரியாமல் கப்பலேறிவிட முடியுமென்றும் அகுஸ்தீன் நினைத்தார். ஆனால் அவளோவெனில், தன் மகனை விட்டுப்பிரிந்திருக்க மனமின்றி, அவரோடுகூடவே கடற்கரைக்குச் சென்றாள்.

அப்போது மாலைக் காலமாகிவிட்டது. இதுவரைக்குமிருந்த அகோரமான சமுத்திரக் கொந்தளிப்பு கொஞ்சங்கொஞ்சமா யடங்க, அலையானது கரையோரத்திலிருந்த கற்பாறையின் மேல், இடிக்கொப்பான சப்தத்துடன் மோதிக் கொண்டிருந்தது. இளங்காற்று பலமாக வீசி, கப்பல்களையெல்லாம் கரைக்கு ஒதுக்கிவிட்டது. ஆகவே, அகுஸ்தீனும் அவரது தோழனும் பயணம் செய்யவிருந்த கப்பலானது நங்கூரம் போடப்பட்டு, இன்னும் பொழுது போகப்போக நல்லமந்தமாருதம் வீசுமென்று, கரையில் காத்துக்கொண்டிருந்தது. தாங்கள் போகுமிடமெல்லாம் கூடவே சுற்றிக்கொண்டு, அகுஸ்தீன் கார்த்தேஜை விட்டுப்போகவே கூடாதென்று, ஒரே பிடிவாதமாயிருந்த மோனிக்கம்மாளை, அவரும் அவரது தோழனும் நோக்கி, என்ன செய்வதென்று தெரியாமல் மலைத்துப்போய், மனோவிசாரத்துடன் கரையோரத்தில் உலாவிக் கொண்டிருந்தார்கள்.

நேரம் நிதானமாய்ப் போய்க்கொண்டிருந்தது. சூரியன் அஸ்தமிக்கவே, சந்திர வெளிச்சமும் அடிவானத்திலிருந்து மறைந்துபோயிற்று. இராக்காலமாயும் காற்றின் திசைமாறாமல் இதுவரைக்கும் வீசிக்கொண்டிருந்த திசையிலிருந்தே இன்னும் வீசிக்கொண்டிருந்தது. ஆதலால் கப்பல் அன்றிரவு புறப்படமுடியாதென்றும், தாங்களும், விசேஷமாய் மனோசலனத்தினாலும் ஆயாசத்தினாலும் களைத்துப்போன மோனிக்கம்மாளும், சற்று படுத்து இளைப்பாறுவது நலம் என்றும், அகுஸ்தீனும் அவரது நண்பனும் தீர்மானித்தார்கள். ஆனால் தான் தூங்கும் சமயம் பார்த்து, எங்கே, தன் மகன் கப்பலேறி போய் விடுவானோவென்று மோனிக்கம்மாள் பயந்து, அப்படி படுத்து இளைப்பாறமாட்டேனென்றாள். ஆனால் அகுஸ்தீன் அவளைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதன்பேரிலும், தான் நகரத்தை விட்டுப் போவதேயில்லையென்று மறுபடியும் உறுதி வாக்களித்ததின்பேரிலும், ஒருவாறு ஒத்துக் கொண்டாள்.

கார்த்தேஜ் நகரில் ஒருகாலத்தில் பிரபலத்துடன் ஞான ஆளுகை புரிந்துவந்த அர்ச். சிப்ரியான் கட்டிய சிறிய கோவில் ஒன்று கரையோரத்தில் கப்பலுக்கருகிலிருந்தது. அக்கோவில் முழுதும் இடிந்துபோனபோதிலும், அதன் குறிப்புகளை இன்னுங் காணலாகும். அக்கோவிலுக்குப்போய் இரவு தங்க மோனிக்கம்மாள் ஒத்துக்கொண்டாள். அப்போது அவளுக்கிருந்த மனவிதனத்தில், நித்திரையைவிட ஜெபமே விசேஷமாய் வேண்டியிருந்தபடியால், அன்றிரவை ஜெபத்திலும் அழுகையிலும் கழித்தாள். அர்ச். அகுஸ்தீன் சொல்லுவது "ஓ! என் கர்த்தாவே! நான் கப்பலேறிப்போய்விட, நீர் விடக் கூடாதென்பதைப்பற்றியல்லாமல், வேறு எதைக் குறித்து உம்மைப் பார்த்து அந்நேரத்தில், என் தாயார் மன்றாடினாள்? ஆனால் நீரோவெனில், அவள் ஆசை விருப்பங்களைக் கண்டிருந்தும், உம்மிடம் அவள் எப்போதும் கோரியிருந்த முக்கியமான காரியத்தை முடிக்கும்படியாக அச்சமயத்தில் அவள் தளரா விசுவாசத்துடன் மன்றாடியும், அம்மன்றாட்டிற்கு நீர் செவிசாய்க்கவில்லை, அது உமது திருவுளம்."

இராக்காலத்தில் காற்று மாறிற்று. பாய் மரங்கள் அசைவதைக்கண்டு நங்கூரம் எடுத்து

விட, அருணோதயத்திற்கு முன்னதாகவே கப்பலானது கார்த்தேஜ் நகரிலிருந்து அதிவேகமாய் உரோமாபுரியை நாடிச்சென்றது. அகுஸ்தீன் கப்பலின் பின்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, தன் தாயார் செபஞ்செய்துகொண்டிருந்த சிறு கோவிலைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டே பயணஞ்செய்தார்.

பொழுதுவிடிந்தது. மோனிக்கம்மாளும் கோவிலைவிட்டுப் புறப்பட்டுவந்தாள். ஆனால் என்னத்தைக் கண்டாள். கப்பல் புறப்பட்டுப்போய் விட்டது. கரையில் ஒரு ஜனமுமின்றி எல்லாம் வெறுமையாயிருந்தது. இதைக் கண்டவுடன், துக்கமிகுதியால் பைத்தியம்பிடித்தவளைப்போல் கதறியழுதாள். கரையில் இப்பக்கத்திலும் அப்பக்கத்திலும்ஓடித் தன் மார்பிலறைந்துகொண்டு, பெருங் கூச்சலிட்டுப் பிரலாபித்தாள். என் மகன் எனக்கு மோசஞ்செய்தானேயென்று சலித்துக் கொண்டாள். கடவுள் தன் மன்றாட்டைக் கேட்கவில்லையேயென்று முறையிட்டாள். ஒரு படகு பேசி உடனே அவரைப் பின்தொடர்ந்துபோகலாமோவென்று யோசித்தாள். ஆனால் உரோமாபுரிக்குப் போனபிறகு அகுஸ்தீன் அங்கே என்னென்ன அக்கிரமத்தில் உழலுவாரோ அதையெல்லாம் தான் பார்த்தும், கேட்டும் இருப்பது எப்படியென்று பயந்து என்ன செய்வதென்று தெரியாமல் மனந்தளர்ந்துபோனாள். அகுஸ்தீன் சொல்வது "என் ஆண்டவரே! ஒரு தாய் தன் பிள்ளையை எப்போதும் நேசித்திராத நேசத்துடன் என்னை அவள் நேசித்துவந்தாள். என்னை வேறு தேசத்திற்குக் கொண்டுபோய் அங்கு எப்படிப்பட்ட சந்தோஷத்தை நீர் அவளுக்கு ஆயத்தம் செய்யப்போகிறீரென்பதை அவள் அறியவில்லை. ஆகையால், அவள் அழுது பிரலாபித்து, தான் துக்கத்துடன் பெற்ற தன் மகனைத் துக்கத்துடனேயே தேடினாள்."

தன் மகன் தன்னை மோசஞ்செய்ததைப் பற்றியும் "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்னும் பெரியோர் வாக்குப்படி, தன் மகன் தன்மட்டில் காட்டிய மனக்கடினத்தைப் பற்றியும் முறையிட்டு, ஒப்பாரிவைத்தழுது கடைசியாய்க் களைத்துப்போனாள். அவள் அழுகை ஓய்ந்தது. தன் புத்திரனைப் பின்தொடர்ந்துபோவது முழுதும் அசாத்தியமான காரியமென்று கண்டு மீண்டும் தகாஸ்தேயுக்குப்போய், முன் போலவே அவருக்காக தாரைதாரையாய்க் கண்ணீர்சிந்தி அழுது கர்த்தரைப் பார்த்து மன்றாடி வந்தாள்.

அர்ச். அகுஸ்தீன், கர்த்தர் அவதரித்த 383-ம் ஆண்டு, செப்டெம்பர்மாதத்தியவிடுமுறை காலத்தில் உரோமாபுரியிற் சேர்ந்தார். அக்காலத்தில் வெகு தளுக்காயிருந்த இந்த அதிசயத்துக்குரிய நகரம், அவருக்கு எப்படித் தோன்றியதென்று நாம் சரியாய் அறிய விருப்பங்கொள்ளுகிறோம். அதன் சுப சவுந்தரியத்தைக் குலைக்க எந்த மிலேச்சக் கூட்டமும் அதில் இன்னும் கால்வைத்ததில்லை. அப்பட்டணத்திலிருந்த ஞாபகஸ்தம்பங்களுக்கும் கோரிகளுக்கும் அமைத்திருந்த கற்கள் வெண்கல நிறமாயும் தங்கமயமாயும் ஜொலித்துப் பிரகாசித்துச் சோபிதமாய் விளங்கிவந்தன.

தல்மேசிய நகரத்தாராகிய அர்ச். ஜெரோம் என்பவர், இருபது வருஷத்திற்குமுன் வாலிபராயும் சுத்த மிலேச்சராயுமிருந்தார். இவர் அப்போது இராஜரீக மண்டபத்திலிருந்து சகல தேவாலயத்திற்கும், நடனசாலையிலிருந்து அர்ச். ஆதிரியரான் பெயரால் கட்டப்பட்டிருக்கும் அலைதாங்கிற்கும் போகவர இருப்பார். சிஸரோவென்பவர் புத்தகத்திலிருந்து நல்ல விஷயங்களையெடுத்து நியாயஸ்தலத்தில் நெடுநேரம் வியாக்கியானஞ்செய்வார். மேலும் "எங்கும் துக்கக் கோலமும் பயங்கரகாட்சியும் மரணக் குறிப்புகளும் வியாபித்திருக்கின்றனவே இதென்ன கோரம்" என்று விர்ஜில் என்பவர் கூறியுள்ள வார்த்தைகளை உற்றுத் தியானித்துக்கொண்டு சுரங்கங்களுள் இறங்கிப்போய்ப்பார்ப்பார். உற்சாகமுள்ள மனோசலனத்துடன் அப்பட்டணத்தைச்சுற்றிப் பார்த்துக்கொண்டிருப்பார்.

அகுஸ்தீனும் அப்படித்தானோ? மதாபிமானத்தில் அர்ச். ஜெரோமைவிட இவர் குறைந்தவரல்லவாயினும், அவரைவிட அதிக சூட்சம புத்தியுள்ளவராயும் நுண்ணிய சுசீலமுள்ளவராயுமிருந்தார். அத்தியந்த சிறப்பாலங்காரத்துடன், சிற்பசாஸ்திர விதிகளையநுசரித்து, அங்கு கட்டப்பட்டிருந்த பிரதாபமுள்ள ஞாபக ஸ்தம்பங்களும், நீரோட்டங்களும், ஆலயங்களும், மாளிகைகளும், வில்வளைவாகக் கட்டப்பட்டிருந்த ஜெயக்குறிகளும் அவரது மனதைக் கவர்ந்தன. கண்ணுக்கு இரமணியமாயிருந்த இவைகளெல்

லாம் உரோமர்களுடைய அளவற்ற சத்துவத்தையும், குறைவற்ற செல்வத்தையும் பிரசங்கித்து வந்தன. நாம் எவ்வளவுக்குத் துக்கக்கிராந்தர்களாயிருப்போமோ, அவ்வளவுக்கு மரித்தவர்கள் புதைக்கப்பட்டிருக்கும் இடம் நமக்கு ஏற்றதாயிருக்குமென்பது உண்மை. ஆதலால் கம்பாக்னு என்னும் இடத்தில் கட்டப்பட்டிருந்த பற்பல விதமான கட்டிடங்கள், இடிந்து நொருங்கி அவ்விடமே பாழடைந்திருப்பதையும், அக்கட்டிடங்களை மெத்தவும் பாடுபட்டுக் கட்டிய சிற்பசாஸ்திரிகள் அப்பாழ் நிலத்திலேயே புதைக்கப்பட்டிருப்பதையும் கண்டு, அச்சிற்பசாஸ்திரிகள் செய்த வேலையாவும் விழலும் வீணுமானவை என்றுணர்ந்தார்.

இருந்தாலும் உரோமாபுரியில் அவர் வசித்திருந்தது அவருக்குக் கெட்டதாயிற்று. அவர் விசுவசித்திருந்த சில வேத சத்தியங்கள்முதலாய், கோடை காற்றடிக்கும்போது இலைகள் உதிர்ந்து விழுந்துபோவதுபோல் அவர் மனதை விட்டு ஒழிந்தன.

அவர் உரோமாபுரியில் சேர்ந்தபோது, தன் சிநேகிதன் ஒருவன் செய்த சிபாரிசுபடி ஒரு மனேக்கியனுடைய வீட்டுக்குப்போனுர். எனெனில், தான் மனேக்கியர்களின் போதனைகளை முற்றிலும் நம்பாதபோதிலும் இன்னும் அவர்களுடனேயே நடமாடிவந்தார். உரோமாபுரியில் இருந்தபோது அவர் நேசபாசத்துடன் சீவித்து வந்ததுடன், அவர்களுடைய மதத்தின்மட்டில் தனக்குண்டான சந்தேகங்களை அவர்களுக்கு வெளியிடாததினுல், அவர்கள் அவர்மட்டில் யாதொரு சமுசயமுமின்றித் தங்கள் சொந்த சபையானைப்போல் அவரை நடத்திவந்தார்கள். உரோமாபுரி இன்னவிதமாயிருக்கிறதென்று இப்போது அநுபவவாயிலாய் அவருக்குத் தெரியவரவே, அவ்விஷயமாய் தான் கார்த்தேஜிலிருக்கும்போது கொண்டிருந்த எண்ணம் உறுதியடைந்தது. மேலும் அங்கு வியாபித்திருக்கும் கேடுகெட்ட துன்மார்க்கத்தையும், நடத்தப்படும் வெட்கங்கெட்ட பூசை நைவேத்தியங்களையும், ஒருவன் மனேக்கிய மதத்தில் எத்தனை அந்தஸ்துகளைத் தாண்டி எவ்வளவு அதிகமாய் அதன் இரகசியங்களை அறிவானே, எவ்வளவுக்கு அதன் குருத்துவ அந்தஸ்தில் உயர்வானே, அவ்வளவுக்கு அவனிடங் குடிகொண்டிருக்கும் துன்மார்க்கத்தையுங் கெட்ட நடத்தையையுங்கண்டு "ஓ! ஓ! மனேக்கிய மதம் இப்படிப்பட்டதுதானே!" என்று தெளிவாக அறிந்துகொண்டார். எனெனில், இத்துன்மார்க்கம் யாவும் அம்மதத்தை ஏற்படுத்தினவன் போதித்த போதனையின் பயனேயன்றி வேறல்லவென்றும், இப்படிப்பட்ட தீய நெறியில் ஒழுகுவதில் யாதொரு தோஷமுங் கிடையாதென்று அந்தரங்கத்தில் அவன் போதித்துவந்தானென்றுங் கண்டார்.

இதைச் சகிக்க அவரால் முடியாமற்போனபடியால், அன்று தொடங்கி மனேக்கிய மதஸ்தன் எவனேடும் தான் இனி சம்பந்தம் செய்வதேயில்லையென்று ஒரே தீர்மானஞ் செய்துகொண்டார்.

இது மெத்த நல்ல காரியந்தான். அகுஸ்தீன் இதுவரைக்கும் வியர்த்தமாய் வேறு மதங்களிளெல்லாம் தேடிவந்த சத்தியத்தை, இப்போது கத்தோலிக்கு மதத்தில் தேடுவாரேயன்றி வேறல்லவென்பதாகத் தோன்றியது. ஆனல் அதற்கும் இன்னும் காலம் வரவில்லை.

தமது திவ்ய பத்தினி தம்மை விட்டுப் பிரிந்து, வேறு காரியங்களில் தன் சிந்தனையை உழலவிடும் சமயத்தில், கர்த்தர் அவளுடைய நன்மைக்காக துன்பத்தை அனுப்புவது சகஜம். அக்காலத்தில் கிறீஸ்துவர்கள் தங்கள் விசுவாசத்திற்கேற்றபடி நடக்காத குறையால், திருச்சபையானது, மேகத்தால் சற்று மறைக்கப்பட்ட சூரியனைப்போல், அவ்வளவு சோபிதமாயிருந்ததில்லை. இங்குமங்கும் கிறீஸ்துவர்களில் சிலர் காட்டும் துர்ப்பலத்தைக்கண்டு அவிசுவாசிகள் ஏளனஞ்செய்வார்கள். விசுவாசிகள் துக்கிப்பார்கள். இப்படியாக திருச்சபையின் தீபம் ஒரு பக்கம் சற்று மங்கினபோதிலும், அம்மங்கின பக்கத்திலிருந்து மறு பக்கத்தைப் பார்த்தால், அப்பக்கம் அத்தியந்த பிரகாசப் பிரபையுடன் ஜொலிப்பதாகக் காணப்பட்டது.

(இன்னும் வரும்)

தப்பித்தவறி ஒரு பாவத்தில் விழுந்தால் தத்தளியாமலும் தயிரியம் விடாமலும் அதைக் குறித்து வியாகுலப்பட்டு அதை விட்டுவிடக் கெட்டியான பிரதிக்கினை பண்ணிக்கொண்டு சுவாமிபேரில் உறுதியான நம்பிக்கைவைப்பாயாக.

—(அர்ச். லிகோரியார்).

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—2.

கார்சியாஸ் பிரபுவும் அவர் மனைவியும்.

(முன் தொடர்ச்சி.)

அச்சமயத்தில் இராயப்பன் வந்து இராப்போசனம் தயாராயிருப்பதாகச் சொல்லவே, யாவரும் எழுந்து போசனச்சாலைக்குச் சென்றனர். அங்கே முன்னிருந்த ஆடம்பரங்களெல்லாம் போய், சாமான்ய மனிதர் சாதாரண காலங்களில் உண்ணும் உணவுக்குமுதலாய் வழியில்லாத அவ்வளவு சொற்பமான போசனம் பரிமாறப்பட்டிருந்தது. புசிக்கையில் உரேக்காள் என்னும் அவ்வீட்டெஜமானி வெகு அமரிக்கையுடன் செய்த சம்பாஷணையைக் கேட்டவர்கள், அம்மாதர்திலகம் வெகு பத்தியுடைய பதிவிரதையென்றும், அவள் தன் நம்பிக்கையெல்லாம் கடவுளிடம் வைத்து, தனக்கு நேரிடும் எல்லா விபத்திலும் பயத்திலும் கஷ்டங்களிலும் அவரையே நாடிச் சென்று அவர்தம் முதவியைத் தேடும் புண்ணியாத்துமாவென்றும் சொல்வார்கள் என்பது நிச்சயம்.

செபஸ்தியான் பிரபுவோ, தான் கடந்த சில வருஷங்களாய் சீவித்துவந்த சீவியத்தைப் பற்றியும், தான் செய்த சண்டைகளைப்பற்றியும், பேசிக்கொண்டிருந்தான். ஆனால் அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அடிக்கடி நடுவில் கார்சியாஸ் பிரபுவைப்பற்றியும் அவரைச் சிறையினின்று மீட்கும் விதத்தைப்பற்றியும் பேசாமலிருக்கவில்லை. இதற்கிடையில் இராயப்பன் அங்கே வந்து யூதனுக்கு என்ன ஏற்பாடு செய்வதெனக் கேட்டான்.

"நமது மாளிகையில் காட்டக்கூடிய உபசாரணை யாவும் அந்த யூதனுக்குரியனவே, ஏனெனில் பென்தாவீது யோக்கியமும் நற்குண நற்செய்கைகளும் வாய்ந்தவனெனத் தெரிகிறது. நான் நாளைக்கு அவனைக் கண்டு, அவன் இங்கே வந்திருக்கும் அலுவலைப்பற்றிப் பேசி யாவற்றையும் ஒழுங்குசெய்வேனென்று சொல்லு" என இராயப்பனிடங் கூறி, உரேக்காள் செபஸ்தியான் பக்கந் திரும்பி, "பென்தாவீது நாங்கள் சேகரித்திருக்கும் ஆபரணாதிகளின் விலையாகக் கொடுக்கப்போகும் தொகை நான் ஏற்கெனவே சேர்த்துவைத்திருக்கும் தொகையை அதிகமாய் விர்த்திசெய்யும் என்று நம்புகிறேன்" என்றாள்.

"ஓ! அத்தொகை ஆல்டீமனுடைய பேராசையை ஒருவாறு தணிக்கக்கூடுமானால், எவ்வளவோ நன்றாயிருக்கும்!" என்று எல்வி என்னும் சிறுமி மொழிந்தாள்.

இம்மொழிகளைக்கேட்ட உரேக்காள் பெருமூச்செறிந்து, "ஆ! மகளே, எல்லாம் சீக்கிரத்தில் தெரியும்" என்று பதில் கூறினாள்.

அச்சமயத்தில் ஊதுகுழல் ஒலி கேட்டது. உடனே அந்தச் சீமாட்டி தன்னிருக்கைவிட்டெழுந்து, அச்சமுந் திகிலுங்கொண்ட குரலில், "ஜூலியன் வந்துவிட்டான். ஆல்டீமனிடமிருந்து செய்தி கொண்டுவந்திருக்கிறான். என் கடைசி முயற்சியாக, என்னுடைய ஆஸ்தியையெல்லாங் கொடுப்பதாகச் சொல்லி அனுப்பினேன். ஆல்டீமன் இதற்காவது இணங்கினானா, இல்லையா என்னும் விபரம் சீக்கிரத்தில் தெரிந்துகொள்வோம்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஜூலியன் அறைக்குள் நுழைந்தான். அவன் கொண்டுவந்தது சுபசேதியல்லவென்று அவன் வாடிய முகங் காட்டிற்று.

ஜூலியன்.—அம்மா, உங்களுக்குக் கடவுள் துணைபுரிவாராக! அவர் உங்களுக்கு மனத்திடனும் ஆறுதலுங் கொடுப்பாராக! தங்கள் உத்தரவுபிரகாரம் ஆல்டீமனிடம் நிருபத்தைக் கொடுக்க டொலிடோவுக்குச் சென்றேன். தங்கள் தூதனைப்பார்க்கமுதலாய் அவனுக்குப் பிரியமில்லாமல் மந்திரியைக் காணும்படிச் சொல்லியனுப்பினான். மந்திரியின் நடவடிக்கையும் அப்படியேயிருந்தது. பிரதான மந்திரியின் சமுகத்தில் அச்சமின்றி வாத்துணிந்ததற்காக என்னை அவமானமாய்ப் பேசினதுமன்றி, தங்கள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளமாட்டேனென்று சொல்

லிவிட்டான். மேலும் இதுகாறும் கேட்டுக் கொண்டிருந்த பத்து லட்சம் போதாதாம்; அதிகம் வேண்டுமாம். அதாவது நாம் தாமதிக்கும் ஒவ்வொரு வாரத்திற்கும் ஆயிரம் பொன்னுணயங்கள் அபாராதமாகச் சேர்த்துக்கொடுக்கவேண்டுமாம்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் உரேக்காள் தன்னை மறந்தவளாய் ஓவென்றலறியழுதாள்; அவள் மக்களிருவரும் கரங்களை உயர்த்தியவண்ணம் சவம்போல் வெளுத்த முகத்தினராய் தங்கள் இடத்தைவிட்டெழுந்து நின்றனர். எல்லாம் முடிந்தது; கடைசி நம்பிக்கையும் போய்விட்டது.

ஆனால் உரேக்காள் என்னும் அந்தச் சீமாட்டியின் தீர்மானம் உடனே சமாளித்துக் கொண்டு தன் நிலைக்கு வந்துவிட்டது. நீர் நிறைந்த தன் கண்களை வானுக்குயர்த்தி, தாழ்மையும் தேவ சித்தத்துக்கமைந்து நடக்கும் உத்தமகுணமுந் தோன்றும்படியான மெல்லிய குரலில் சொல்லுவாள்:—"ஆண்டவரே! உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக! அவரை எங்களுக்கு நீரே கொடுத்தீர்; நீரே எடுத்துக்கொண்டீர்; அவரை எங்களுக்கு மீண்டும் கொடுக்கக் கூடியவர் நீரே. உம்முடைய பரிசுத்த நாமம் என்றென்றைக்குந் துதிக்கப்படுவதாக! என் மக்களே! மனிதப் பிரயத்தனத்தால் ஆகக் கூடியவையனைத்தும் செய்தாயிற்று என்பதற்கு நீங்களே சாட்சி; எல்லாம் வீணாயிற்று. ஆயினும் நாம் அவநம்பிக்கைப்படக் காரணமில்லை. சந்தேகமின்றி நமதாண்டவரே இவ்விஷயத்தில் வேலை செய்ய உத்தேசித்திருக்கிறார்போலும். அதனால்தான் மனிதப் பிரயத்தனம் எல்லாம் வியர்த்தமாயிற்று. அவர் திருச்சித்தத்துக்குமுன் மனித முயற்சி எம்மாத்திரம்? தேவ உதவி! இதைவிட நிலைமையும் மேலானதுமான நம்பிக்கை வேறுண்டோ?" என்று, செபஸ்தியானை நோக்கி, "பிரபூ! மீண்டும் நாளை உம்மைப் பார்ப்போம். இச்சமயம் நமது சிநேகிதரும் பாதுகாவலருமாகிய எல்லாம்வல்ல எம்பிரானை நாடி அவர்தம் திருச்சீமுகத்திற்குப் போகவேண்டுமென்று என்னை யறியாமலே எனக்குள் ஒருணர்ச்சி யுதித்து, என்னைத் தூண்டுகிறது. அவரிடம் நான் பணிந்து கேட்கவேண்டியவை அநேகம்" என, தன் ஆசனத்தைவிட்டெழுந்து, தன் இரு பெண்மணிகளுடன், கோட்டைக்குள்ளிருக்கும் சிறு கோவிலுக்குச் சென்று, அங்கே நடுச்சாமம்வரையில் ஜெபித்துக்கொண்டிருந்தாள்.

செபஸ்தியான் பிரபு தன்னறையையடைந்து, கார்சியாஸ் பிரவுவை மீட்கும் மார்க்கம் ஏதாவதுண்டாவெனத் தனக்குள்ளேயே சிந்தித்துப்பார்த்தான். நெடுநேரம் யோசித்தும் அவன் புத்திக்கு ஒன்றும் புலப்படவில்லை. கடைசியாய் "துணிந்தவனுக்குத் துக்கமுமில்லை, வெட்கமுமில்லை" என்பதுபோல், ஆபத்து, இடையூறுகளைத் திரணமாய் மதித்து எவன் ஒருவன் துணிந்து ஒரு காரியத்தைச் செய்கிறானோ, அவன் கட்டாயம் வெற்றியடைவான் என்னுங் கொள்கையினால், மாறுவேஷம்பூண்டு டொலிடோ நகர்போய், கார்சியாஸ் பிரபு இருக்கும் சிறைச்சாலையருகிலிருந்துகொண்டு அவரை மீட்கும் உபாயத்தைப்பற்றி யோசிப்பதெனத் தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

இத்தீர்மானத்தை உரேக்காளிடம் அவன் வெளியிடவே, அம்மாதுசிரோமணிக்குண்டான ஆச்சரியமும் நன்றியறிதலும் இவ்வளவவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆனால் அத்தீர்மானத்தின்படி நடந்துகொள்வதற்கு அநேக இடையூறுகளுண்டென்றும், அவ்விடையூறுகள் வெல்லமுடியாதனவென்றும் அவள் அபிப்பிராயப்பட்டாள். இது விஷயத்தில் அவள் மனதிலுண்டான அச்சத்தை அவள் வெளியிடாமலிருக்கவில்லை. தன் கணவன்பேரில் தனக்குள்ள காதல், அவரை மீட்பதற்குச் செய்யும் முயற்சிகள் என்ன விபத்தை விளைப்பதாயிருப்பினும், அவற்றை வேண்டாம் என்று தடுக்கலாகாதென அவளை ஏவினபோதிலும், நமது யௌவனவீரன் செய்யத்துணிந்த காரியத்தை ஆமோதிக்க அவள் பின்வாங்கினாள். "அந்நகரில் செபஸ்தியான் பிரபுவால் என்ன செய்யக்கூடும்? அவருக்கு அங்கே அறிமுகமானவர் ஒருவருமில்லை. அவருடைய நடவடிக்கைகளை அங்கிருப்பவர்கள் கட்டாயம் கவனிப்பார்கள். கொஞ்சஞ் சந்தேகித்தார்களோ கெட்டது குடி. மேலும் இளவயதினர்; அனுபோகம் போதாது" என்று இவ்வாறு தனக்குள்ளேயே சிந்திக்கலானாள். யௌவனவீரன் தானேபோய் ஆபத்தில் சிக்கிக்கொள்வதை நினைக்க அவள் தேகம் நடுங்கிற்று; உடனே

தன் மனதில் தோன்றிய நியாயங்களை எடுத்துக் கூறி அவனைத் தடுத்தாள். என்ன சொல்லியும் செபஸ்தியான் தான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவதே சரியென்று, டொலிடோ நகரை நாடிப்போக யாரோ தனக்குள் தூண்டுவதாக நினைத்து, உடனே புறப்படத் தீர்மானித்தான்.

இராயப்பன் மாளிகையிலிருந்த குதிரைகளில் நல்லதாக ஒன்றைச் சித்தஞ்செய்தான். நமது வீரர்திலகம், அம்மாளிகையின் எஜமாட்டியிடமும், அவளிருமக்களிடமும் விடைபெற்றுக்கொண்டு, அவர்களுடைய வேண்டுதல் பலனும், ஆசீருமே தன் வழித்துணையாய்க்கொண்டு, பிரயாணத்தை ஆரம்பித்தான்.

அதிகாரம்—3.

டோலிடோர்வுக்குப் பிரயாணம்.

தன் குதிரைக்குச் சிறகுகளிருந்தால், எவ்வளவோ சீக்கிரத்தில் தான் நாடிச்செல்லும் நகரையடையக்கூடும் என்று நினைத்து வருந்தினன் நமது யௌவனவீரன். இராயப்பனல் தெரிந்தெடுக்கப்பட்ட குதிரை, அங்கிருந்த குதிரைகளில் மிகச் சிறந்ததாயினும் செபஸ்தியான அவசரத்துக்குத் தகுந்ததல்ல. ஆதலால் அவன் குதிரையைக் கடுக நடத்திக்கொண்டுவருகையில் தன் சொந்தக் குதிரை கள்ளர் விடுகணைக் கிலக்காய் மாண்ட இடத்தண்டை வரவே, அதன் ஞாபகம்வந்து, "அருளா, உன்னைப்போன்ற குதிரை எனக்கினி கிடைக்கப்போகிறதுமில்லை; நானும் ஏறிச் சவாரி செய்யப்போவதுமில்லை!" என்று தனக்குள்ளாகவே பேசிக்கொண்டான்.

"பிரபூ! மன்னிக்கவேண்டும்" என்று செபஸ்தியானுக்குப் பதிலுரைப்பதுபோல் ஒரு குரலொலி கேட்டதும், வீரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பென்தாவீது என்னும் யூதன், மாளிகையில் கொடுக்கப்பட்ட ஒரு கோவேறு கழுதையின்மேல் சவாரிசெய்துகொண்டு தன்னை நெருங்கிவருவதைச் செபஸ்தியான் கண்டான். "தாங்கள் உத்தரவு அளித்தால், இதற்கு இணையானது அல்லது இதைவிடச் சிறந்த ஒரு குதிரையைத் தங்களுக்குத் தருவித்துத் தர என்னல் முடியும்" என்றான் யூதன்.

பென்தாவீதிடம் ஒன்றும் வாங்கக்கூடாதென்பது செபஸ்தியான் எண்ணம். ஆதலால் அவன் சொல்லை ஒரு பொருட்படுத்தாதவன் போல், "யூதர்களெல்லாம் இப்படித்தான்; தங்களிடமிருக்கும் பொருள் உயர்ந்ததென்றே சொல்லும் இயல்பினர் உன் இனத்தவர்! உங்கள் வழக்கம் உங்களைவிட்டுப்போகுமா? ஆனல் நீயேன் மீண்டும் இவ்வழியாய் வருகிறாய்? மாளிகையில் உன் வேலை முடிந்ததா?" என்று கேட்டான் நமதிளவல். "ஆம், பிரபூ! எஜமாட்டியவர்கள் கேட்ட தொகை அவ்வளவையும் ஒரு இம்மியுங் குறைக்காமல் அப்படியே கொடுத்துவிட்டேன். தொகையும் ஏராளமானது; இந்த பேரத்தில் லாபங் கிடைக்குமோ, கிடைக்காதோ என்பது கடவுளுக்குத்தான் தெரியுமே ஒழிய என்னல் ஒன்றும் சொல்லமுடியாது."

செபஸ்தியான் பிரபு யூதன் வார்த்தையை இதற்குமுன் நம்பாமலிருந்திருக்கலாம்; ஆனல் உரேக்காள் என்னு மாது பென்தாவீதனுடைய யோக்கியதையைப்பற்றிப் பேசினதிலிருந்து யூதன் வார்த்தையில் அவன் நம்பிக்கைவைக்காமல் இருக்கமுடியவில்லை. இந்த காரணத்தால் தான் நமதிளவல் அவனுடன் மீண்டும் சம்பாஷிக்க ஆரம்பித்தது.

"ஏ! யூதா! நீ இப்போது எங்கே போகிறாய்? உன் வாசஸ்தலம் ரியாஸா என்று சொன்னதாக ஞாபகம்! அவ்வூருக்குப்போக இதுவல்லவே வழி."

"மெய்தான், பிரபூ! மெய்தான்! ஆனல் பருந்தின் பாதுகாவலில் சென்று கழுகின் அபாயத்தினின்றும் நிச்சயமாய்த் தப்பித்துத் தன் கூட்டை வந்தடையக்கூடுமானல் ஒரு புறா என் ஷ்தைரியமாய் வெளியில் உலாவக் கிளம்பாது? தாங்கள் மேற்கொண்டுள்ள இரக்கத்தின் அலுவலைச் செய்து முடிப்பீர் என்பது என்ன நம்பிக்கை? இந்தக் காட்டின்வழியாய் நாம் போகுமளவும் நான் தங்கள் பின்னல் சற்றுத் தொலையில் வரும்படியாக உத்திரவளிக்கவேண்டும். இந்த ஏழை யூதனை இம்சிக்கக் காத்திருக்கும் பகைவர் அநேகருண்டு. இந்தக் காட்டைக் கடந்ததும் எனக்கு நேரிடக்கூடிய அபாயங்கள் யாவும் ஒருவாறு நீங்கிவிட்டன என்னும் நம்பிக்கையுடன், சுலபமாய் என் வீடுபோய்ச் சேர்வேன்" என்று யூதன் மிக்கப் பணிவாய் மொழிந்தான்.

யூதனுடன் சேர்ந்து பிரயாணஞ்செய்ய நமது வீரனுக்குக் கிஞ்சித்தும் பிரியமில்லை; ஆயி

னும் இரக்கத்தால் தூண்டப்பட்டு, அவன் வேண்டுகோளுக்கிசைந்தான். மலைப்பிரதேசமானதால் செபஸ்தியானுடைய குதிரை வேகமாய்ப் போக முடியவில்லை. இதனால் யூதனும் தன் கோவேறு கழுதையை அவன் பின்னாகவே நடத்திவா எதுவாயிருந்தது.

ஆனால் மீண்டும் யூதன் பிரபுவினிடம் சம்பாஷிக்கத் தொடங்குவது அவ்வளவு சுலபமான காரியமல்லவென்று உணர்ந்தான்; பென்தாவீது பேச்சில் சமர்த்தன்! வாய்ச்சாதுரியன்; எவரையும் சுலபமாகத் தன்வயப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தவன். அப்படியிருந்தும் அச்சமயம் அவன் எப்படியாவது செபஸ்தியானுடன் வாசாமகோசரமாய்ப் பேசவேண்டுமெனத் தன் சமர்த்தையெல்லாம் பிரயோகித்துப் பிரயாசைப்பட்டும், வீரன் வாயினின்றும் இரண்டொரு குறுமொழி வந்ததேயன்றி, அவன் எண்ணம் பலிக்கவில்லை. வீரனோ யூதன் பேசும் விஷயத்தைக் கவனியாதவன்போலவே வந்துகொண்டிருந்தான்.

இரு பிரயாணிகளும் காட்டைக் கடந்து, தத்தம் பாதைகள் பிரியுமிடம் வந்துசேர்ந்தனர்.

"ஆண்டவர் துதிக்கப்படுவாராக!" என்று ஏதோ பெருஞ் சுமையை இறக்கினவன்போல் உரத்த சத்தமாய்ச் சொல்லிக்கொண்டே யூதன் "அமலேக்கிய பூதங்கள் என்னைத் தொந்தரை செய்யத் துணியவில்லை; ஏனெனில் உமது வருகை அவர்களைத் துறத்தித் தமது குகைகளில் பதுங்கச்செய்தது" என்று, இவ்வாறாக, தன் ஜாதியாரின் வழக்கம்போல், நன்றியறிதல், ஆசீர், ஸ்துதி, முதலியவைகள் நிறைந்த வார்த்தைகளைச் சரமாரியாய்ப் பொழிந்தான். அவற்றைப் பொறுமையுடன் கேட்க செபஸ்தியானுக்குப் பிரியமில்லாமல், கைஜாடையால் அவனிடம் விடை பெற்றுக்கொண்டு, தன் குதிரையைத் தூண்டிப் புறப்பட்டான்; ஆனால் அவன் ஏறியிருந்த குதிரையோ, தூண்டின கடுமையால் காலிடற முழங்கால்கள் தரையிலடிபட்டுக் காயமடைந்ததால், இனி அது தன்னைக் கொஞ்ச தூரமுதலாய் சுமந்துநடக்கமுடியாதென்று நமதிளவல் உணர்ந்தான். இந்த அசம்பவத்தால் செபஸ்தியான் மனதிலெழுந்த வருத்தமும் எரிச்சலும் எத்தகையனவென்று இதை வாசிப்போரே தெரிந்து கொள்ளலாம்.

இதைப்பார்த்த யூதன், "பிரபுவே! தங்கள் முகம் மாறுபட்டிருப்பானேன்? இந்தத் தேசத்தில் சிறந்தவையென்னும் அரபிக் குதிரைகளில் ஒன்றைத் தாங்கள் தெரிந்துகொள்ளலாமே. இஸ்பானிய நாட்டிலேயே இத்தகைய குதிரை இனி கிடைப்பதரிது என்று சொல்லும்படியான சிறந்த அசுவம் ஒன்றின்மேல் தாங்கள் ஏறிச் சவாரிசெய்யும் சந்தர்ப்பம் வாய்த்ததே என்று சந்தோஷப்படாமல், மனம் வாடி வருந்துவானேன்?" என்று தைரிய வார்த்தைகள் மொழிந்தான்.

"ஏ! என்ன சொல்லுகிறாய்?"

"பிரபூ! நான் சொல்லுவது உண்மை; என்னை நம்பும். இன்னும் ஒருமணிநேரத்தில் தாங்கள் மூரா என்னுங் கிராமம்போய்ச் சேருவீர்கள். அங்கே நுபன் என்னுங் குதிரை வியாபாரி ஒருவனிருக்கிறான்! அவனிடம் முதல்தரமான இருபது குதிரைகளிருக்கின்றன. அவை சாமான்யமல்ல; அரசர்கள் ஏறும் யோக்கியதை வாய்ந்தன."

"அத்தகைய குதிரைகளை வாங்க என்னிடம் பணமேது?"

"ஆண்டவனே, மன்னிக்கவேண்டும். பணம் இருக்கவேண்டிய அவசியமில்லை; தாங்கள் இந்தக் கடிதத்தை நூபனிடங் காட்டினால், அவன் தங்களுக்கு வேண்டிய குதிரையைக் கட்டாயங் கொடுப்பான்" இப்படிச் சொல்லிக்கொண்டே தன் சட்டைப்பையினின்று ஒரு துண்டு கடிதத்தை யெடுத்து அதில் என்னவோ எபிரேய பாஷையில் இரண்டொரு வசனங்கள் எழுதி, செபஸ்தியான் கையிற்கொடுத்து மீண்டுஞ் சொல்வான்:—"தாங்கள் அவனிடம் என்ன வாங்கினபோதிலும் அதன் கிரயத்துக்கு நான் ஜவாப்தாரி என்பதாய் எழுதியிருக்கிறேன். செலவுக்குப் பணம் வேண்டுமானாலுங் கொடுக்கும்படிச் சொல்லியிருக்கிறேன்! பதினாயிரம் வரையில் கொடுப்பான்; வேண்டுமானால் பெற்றுக் கொள்ளும்."

"ஆனால், பென்தாவீது நன்றாய் யோசித்துப்பார். இதனால் உனக்கு நஷ்டமில்லையா? நான் இந்தத் தொகையைத் திருப்பிக்கொடுப்பேன் என்பது என்ன நிச்சயம்? இது விஷயத்தில் உனக்குப் பயமொன்று மில்லைபோலும்!"

"இவ்விஷயத்தில் நான் ஏன் கலங்கவேண்டும்? தங்களால் காப்பாற்றப்பெற்ற ஓர் ஏழை யூதனை தாங்கள் ஒருபோதும் மோசஞ்செய்ய மாட்டீர்கள் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். தங்களால் பணத்தைத் திருப்பிக்கொடுக்க முடியாவிட்டால், பென்தாவீது அதைப்பற்றி மறுபடியுங் கேட்கவேமாட்டான். ஆற்றின் சுழலோட்டத்தையும், காட்டின் கள்வரையும் அவன் எப்பவும் தன் ஞாபகத்தில் வைத்து, தன்னைக் காப்பாற்றிய மகானுபாவருக்கு தன்னாலான உதவி செய்யத்தகுந்த சந்தர்ப்பம் வாய்த்ததே என்று சந்தோஷமடைவானே ஒழிய பணம் வரவில்லையே என்று வருந்துபவனல்ல பென்தாவீது."

"யூதா! உன் பணம் யாருக்கு வேண்டும்? நான் போகும் காரியம் அனுகூலமாகி உயிருடன் திரும்புவேனாகில், கட்டாயம் இந்தக் கடனைத் தீர்த்துவிடுகிறேன். நான் இறந்துவிட்டதாக செய்தி கிடைத்தால், உடனே உரேக்கா சீமாட்டியிடம் போ, அவர்கள் நான் கொடுக்கவேண்டிய தொகையை எப்படியாவது கொடுத்துவிடுவார்கள்."

யூதன் அச்சமயம் செய்வதாகச் சொன்ன உதவியை செபஸ்தியானால் மறுக்கமுடியவில்லை. ஏனெனில் அவனுக்கு அப்போது ஒரு குதிரை மாத்திரமல்ல, செலவுக்குப் பணமும் அவசியமாய் வேண்டியிருந்தது. ஏனெனில் தான் உத்தேசித்துப்போகும் விஷயத்துக்கு வெறுங்கையனாய்ப் போதல் மதியீனம் என்பது அவனுக்குத் தெரியாததல்ல.

இந்த ஏற்பாட்டுடன் இரண்டு பிரயாணிகளும் பிரிந்து வெவ்வேறு வழியாய்ச் சென்றனர். ஆனால் தாமிருவரும் வெகுசீக்கிரத்தில் வேறு சந்தர்ப்பத்தில் சந்திக்கவிருப்பது அவர்களுக்கு அப்போது தெரிய நியாயமில்லை. செபஸ்தியான் பிரபு தன் குதிரையை மெதுவாய் ஓட்டிக்கொண்டு மூரா என்னும் கிராமத்தை நோக்கிப்போயினன்.

(இன்னும் வரும்.)

ச. செல்வன்.

ஒருவர்பேரிலும் தூறுசொல்லாமல் எல்லோரையுங் குறித்து நன்றாய்ப் பேசி குற்றவாளிகள் பேரிலுங்கோபங்கொள்ளாமல் இரக்கமாயிருந்து அவர்கள் திருந்தப் பிரயாசப்படுவாயாக.

—(அர்ச். லிகோரியார்.)

MARIAN CONGRESS.
மரியாயின் மகா சங்கம்.

மரியாயின் மகா சங்கத்தின் அமைப்பும், அது நன்கு நடைபெறுவதற்கான ஏற்பாடுகளும் பின்வருமாறு:—

சபைத்தலைவர்கள்.—(1) சென்னை அதிமேற்றிராணியார் அவர்கள். (2) திருச்சினாப்பள்ளி மேற்றிராணியார் அவர்கள்.

உப சபைத்தலைவர்.—மயிலாப்பூர் மேற்றிராணியார் அவர்கள்.

காரியதரிசிகள்.—(1) சென்னை அதிமேற்றிராசனத்து விக்கர் ஜெனரலாகிய, மிக. சங். டி. கஸ் சுவாமிகள். (2) திருச்சினாப்பள்ளி சங். செஸ்த்தியர் சுவாமிகள். (3) ம-ா-ா-ஸ்ரீ எ. ஜெகநாதம் பிள்ளை. (4) மிஸ்டர் லூயிஸ் ரொசேரியோ.

பொக்கிஷதார்.—சென்னை, சங். எ. மெர்க்கஸ் சுவாமிகள்.

இவர்களுக்குத் துணையாக ஏற்படுத்தப்பட்டுள்ள காரிய நிர்வாக சபைகள்.

முதலாவது.—(General Committee) பொதுவான ஆலோசனைச் சபை. இந்தச் சபையில் சென்னையிலிருக்கும் 9 குருமார்களும், 22 ஐரோப்பியர்களும், 11 இந்தியர்களும் ஆலோசனைக் கர்த்தர்களாயிருக்கின்றனர். இவர்களுடன் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய அந்நிய நாடுகளில் ஆங்காங்கு தெரிந்துகொள்ளப்பட்ட குருக்களும், ஐரோப்பியர்களும், இந்தியர்களுமாக 46 பேர்கள் மேற்கூறிய சபைக்கு ஆலோசனை கொடுக்கும் அங்கங்களாக இருக்கின்றனர். இவர்கள் கீழ்வரும் மற்றைய சங்கத்தார்களினது விஷயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து, நடத்தும்படி அதிகாரங்கள் கொடுப்பவராவார்கள்.

2-வது.—(Reception and Accomodation Committee and Hospitality League) வரவேற்றலும் வசிக்க இடங்கொடுக்கும் சங்கமும் விருந்தோம்பும் சங்கமும்.

இந்தச் சங்கத்தார் பல பாகங்களிலிருந்து மரியாயின் மகோற்சவத்தை முன்

னிட்டுவரும் கத்தோலிக்கர் யாவரையும் நல்வரவேற்றலும் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை ஏற்படுத்தவும் கடமைப்பட்டிருப்பதோடு, பிறவூர்களிலிருந்துவரும் கத்தோலிக்கருடைய உறவின்முறையார் பந்துக்கள் தங்குவதற்குவேண்டிய ஏற்பாடுகளை முன்னதாகவே நிச்சயப்படுத்தி தெரிவிக்கவும் கூடியவர்களாயிருப்பார்கள். இதனையே Hospitality League என்று சொல்லப்படும். இதற்காகவே இந்தச் சங்கத்தில் முக்கியமாய் சென்னையும் அதற்கடுத்த பட்டணங்களிலுமுள்ள எல்லா விசாரணைக்குருக்களும், கத்தோலிக்குப் பள்ளிக்கூடத் தலைவர்களும் ஏறக்குறைய 75 உள்ளூர் வெளியூர் வாசிகளும் அங்கங்களாயிருக்கிறார்கள்.

3-வது.—(Subjects and Session Committee) விஷயங்கள் கூடும்காலத்தைக் குறிக்கும் சங்கம்.

இந்தச் சபையார், சங்கம் கூடும் அந்த நாட்களில் இன்னின்ன காலத்தில் நடைபெறவேண்டியவைகள் இன்னின்னவையென்றும், அந்தந்தச் சமயங்களில் பேசப்படிக்கவேண்டிய விஷயங்கள் இன்னின்னவையென்பதைப்பற்றியும் முன்னதாகவே ஆராய்ந்தறிந்து முடிவுக்குக் கொண்டுவர வேண்டியவர்களாவார்.

4-வது.—(Religious Ceremonies and Exhibition Committee) வேதச் சடங்குகள் காட்சிப் பொருட்களின் சபையார்.

இந்தச் சங்கத்தவர், சங்கங் கூடும் தினம்முதல் முடிவுவரையில் சென்னையிலுள்ள எல்லா ஆலயங்களிலும் சங்க சபையிலும் நடக்கவேண்டிய வேதச் சடங்குகள் இன்னவை என்பதை முன்னதாக முடிவுபடுத்தி அதன்படி நடத்த உத்தரவாதம் பெற்றவர். அன்றியும் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களிலிருந்துவரும் பூர்வகாலத்து வேதப்படங்கள், சுரூபங்கள் முதலிய அபூர்வமான காட்சிகளைச் சங்கம் கூடும் காலத்தில் யாவரும் பார்த்துக் களிக்க முன்னதாக முயற்சிசெய்து சேகரித்துவைக்கக்கூடியவர்.

5.வது.—(Illumination, Procession and Pageant Committee) வாணவேடிக்கை சுற்றுப்பிரகாரம் நிதர்சன காட்சிச் சபையார்.

இச்சபையார், சங்கம் நடைபெறும் காலத்து காண்போர் மனங்களிக்க நானாவித மான வாணவேடிக்கை முதலியவைகளையும் சுற்றுப்பிரகார விஷயமாய் நடத்தவேண்டியவைகளையும் சித்தப்படுத்தக் கடமைப்பட்டவர்கள். அன்றியும் சந்தோஷம், துக்கம், மகிமைமுதலிய தேவ இரகசியங்களை நிதர்சனமாய்ச் சிறுவர்களைக்கொண்டு நாடக ரூபமாய்க் காட்டுதல் முதலிய ஆழ்ந்த காட்சிகளையும் ஆராய்ந்து செய்ய வல்லவராவர்.

6-வது.—(Press Committee) பிரசுர சங்கத்தார்.

இக்கூட்டத்தார், காங்கிரஸ் நடைபெறும் நாட்களில் நிகழும் விஷயங்களை, முக்கிய பாஷைகளில் துண்டுப் பத்திரிகைகளாக அச்சிட்டு வெளியிடவேண்டியவராவர்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

கோறமாண்டல்.

கோலார் கோல்ட் பீல்டு பால்காட் மைன் லில் எழுந்தருளியிருக்கும் அர்ச். செபஸ்தியார் கோவில் பங்கு விசாரணையை கடந்த 8 வருஷ காலமாய் அதி ஊக்கத்துடனும் தளரா பிரயாசையுடனும் பார்வையிட்டுவந்த சங்கைக்குரிய Y. M. கோரேன் சுவாமியவர்கள் தமது சவுக்கிய குறைவினிமித்தம் ஷை பங்கு விசாரணையை நடத்தக்கூடாமையால், நிகழும் ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி தமது கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்த ஞான ஆளுகையை சங்கைக்குரிய மோன்தே குருசுவாமியவர்களுக்கொப்படைத்து 13-ந் தேதியாகிய வெள்ளிக்கிழமை காலையில் தமது ஞானமக்களை கண்கலங்கவிட்டு பெங்களூர் ஏகினர். இவருடைய சாதுரியமும், தயாள சிந்தையும், விடாமுயற்சியும், மற்றும் மேலான குணாதிசயங்களும் மிகவும் வியக்கத்தக்கதே. இவரையே "எளியவர்களின் தந்தை" என்னலாம். இவரால் கிறீஸ்துவர்கள் பெற்றடைந்த நன்மைகள் அநேகம். அதன் பிரதி நன்றியாக கிறீஸ்துவர்களும் தங்களாலியன்றவிதமாய் தங்களுடைய

பக்ஷத்தையும் நன்றியையும் மேரை வணக்கா சாரத்துடன் காண்பித்தார்கள். குருக்களுக்குள்ளும் கிறீஸ்துவர்களுக்குள்ளும் இவ்வித ஒற்றுமை உண்டாகி நீடித்திருப்பதினல் வரும் பலன்கள் அநேகமென்று இச்சம்பவத்தால் வெளிப்படுகிறது.

Coromandel. }
18—8—20. } C. T. P.

பரத மஹாஜன சங்கத்தின் முதலாவது மஹாநாடு.

தூத்துக்குடி பூர்வீக கிறீஸ்துவர்களாகிய பரதகுலத்தவர்கள் உலக முற்போக்கில் தங்கள் நிலைமையை இதர சமூகங்களுக்கொப்ப உயர்த்திக்கொள்ளக் கருதி, நாளது 1920ஹு ஆகஸ்டு ௴ 5, 6, 7 உ களில் ஓர் மஹாநாட்டைக் கூட்டுவித்தனர். முதலாவதாகிய இம்மஹாநாட்டிற்கு, காப்டன் லெயோ. எஸ். மச்சாது F. R. C. S., D. P. H., அவர்கள் தலைமைவகித்திருந்தனர். ஸ்ரீமான் S. A. மோத்த அவர்கள் உபசரணைக் கமிட்டித் தலைவராகவிருந்து, காரியங்களை வெகு திறமையாய் நிர்வஹித்துவந்தனர். கரை துறைகளிலிருந்து நூற்றுக்கணக்கான பிரதிநிதிகளும் பிரமுகர்களும் விஜயஞ்செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பமுதல் முடிவுபரியந்தம் பிரதிநிதிகள்முதல் அனைவரும் காட்டிவந்த உற்சாகமும் ஊக்கமும் என்றைக்கும் மறக்கமுடியாத சம்பவமென்பதில் தடையின்று. இவ்வித ஊக்கமும் உற்சாகமும் நிலைபிரியாதிருந்து வருமெனில் பரத மஹாஜன சங்கத்தின் நன்னோக்கங்கள் சித்தியடைவதற்கு வெகு நாள் செல்லாதென்பது துணிவு.

மஹாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் சுருக்கமாவன.

1. இராஜ விசுவாசம், இளவரசர் வரவேற்றல்.

2. பரிசுத்த பாப்பரசருக்கு தாழ்மையான வணக்கத்தையும் தளராத விசுவாசத்தையும் தெரிவித்துக்கொள்ளுதல்.

3. பரதகுலத்தவர்க்குள் மகமை என்னும் பொது நிதியொன்றை ஸ்தாபிப்பதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து ஊர்ஜிதத்துக்குக்கொண்டு வருதல்.

4. ஆலந்தலையூரில் புரொட்டெஸ்டாண்டு மதத்தைத் தழுவியிருந்துவரும் பாதகுல சகோதரர்களை, பழயபடி சத்திய கத்தோலிக்கு திருமறையிற் சேரும்படி கேட்டுக்கொள்ளுதல்.

5. பரதகுலத்தவர்க்குள் இருந்துவருவதாகிய ஆடம்பரமும் அநாவசியமுமான செலவுகளையொழித்துச் சிக்கனத்தைக் கைக்கொள்ளுதல்.

6. பரத மஹாஜன சங்கத்திலிருந்து தமிழ் பத்திரிகையொன்றை ஏற்படுத்தி நடத்திவருதல்.

7. பரதகுலத்தவர் வாழுங் கரைதுறைகளிலிருக்கும் மதுபான வியாபாரத்தை இயன்றளவு குறைத்துவரும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுதல்.

8. கப்பலோட்டுந் தொழில், மாலுமி சாஸ்திரம் இவைகளைப் பயிலுதற்குரிய பாடசாலையொன்றை (Nautical School) தூத்துக்குடியில் ஸ்தாபிக்குமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுதல்.

9. திருவாங்கூரைச்சேர்ந்த பரதகுலத்தவர்க்கு முட்டமென்னும் ஊரில் அந்நிய ஜாதியினரால் நேர்ந்திருக்கும் கஷ்டங்களை விசாரித்துவரும்படி, கமிஷனென்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

10. பரதகுலத்தவர் வசித்துவரும் பகுதிகளில் அவர்களின் தொழிலும் நிலைமையும் அபிவிருத்தியடையுமாறு ஐக்கியநாணயச் சங்கங்கள், ஐக்கியப் பண்டகசாலைகள் இவைகளை ஸ்தாபிக்கும்படி அரசாங்கத்தாருக்கு மனுப்பண்ணிக்கொள்ளுதல்.

11. பரதகுலத் தொழிலாளர்களின் நிலைமையை உயர்த்திக்கொள்வதில் போதிய ஆதரவளித்தல்.

12. பரதகுலப் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியாயிருக்கும்படி ஓர் சத்திரம் தூத்துக்குடியில் ஸ்தாபித்தல்.

"மரியாயின் மகா சங்கம்"
ஓர் வேண்டுகோள்.

நமது தாய்பூமியாகிய இந்தியாவில்—சென்னைமாநகரில், மரியாயின் மகா சங்கம் வருகிற ஜனவரி மாதம் 13, 14, 15, 16 தேதிகளில் கூடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவ

தானது, இந்தியாவில் கத்தோலிக்குக் கிறீஸ்து வேதத்துக்கு பேரும் புகழும் பெருமையுமாய் முடியும் என்பதற்கையமில்லை. ஆனால், இந்தியாவில் உலவிவரும் கத்தோலிக்கு இங்கிலீஷ் பத்திரிகைகள் இச்சங்கத்தைப்பற்றிய விஷயங்களை இங்கிலீஷ் பாஷை தெரிந்த இந்திய கத்தோலிக்கருக்கு அவ்வப்போது எடுத்துக்கூறி, இச்சங்கத்தின் விஷயமாய் அறிவைப் புகட்டி உற்சாகமூட்டிவருவது மெய்யென்றாலும், பட்டணங்களிலும், கிராமாந்தரங்களிலுமுள்ள இங்கிலீஷ் படிப்பில்லாத லக்ஷக்கணக்கான கத்தோலிக்கர் இச்சங்கத்தின் காரியாதிகளை அறியாமலிருப்பது விசனிக்கத்தக்கதே. இக்குறையை நீக்குமாறு மரியாயின் சங்கத்தைப்பற்றிய காரியங்களை சுதேச பாஷைகளில், அதாவது, தமிழிலும், தெலுங்கிலும், மலையாளம், கொங்கணி பாஷைகளிலும், வாரத்திற்கு ஒரு முறையாகிலும், மாதத்தில் இரு முறையென்கிலும் துண்டுப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்து சுதேச கிறீஸ்துவர்களுக்கு அறிக்கையிட்டு, அவர்களுடைய பக்தி வைராக்கியத்தையும், உற்சாக ஊக்கத்தையும் தூண்டி வளர்த்திவருவது மெத்தப் பிரயோசனத்தையும், நன்மையையும் பயக்குமென்று சொல்லத்தேவையில்லை.

இத்தகைய துண்டுப் பிரசுரங்களைச் சென்னையிலாவது, புதுவையிலாவது, திருச்சினாப்பள்ளியிலாவது கத்தோலிக்கு அச்சுக்கூடங்களை நடத்துகிற கனவான்கள் பொறுப்பாய் அச்சிட்டு, ஒவ்வொரு துண்டுப் பத்திரிகைப் பிரதிக்கு ½-அணா கிரயம்போட்டு ஜனங்கள் சுலபமாய் வாங்கி வாசிக்கும்படி வற்புறுத்துவார்களாகில் இது ஓர் அரிய பெரிய தருமமாகும்.

ஆனால் தேவதாயாருக்குத் தோத்திரமாயும் பிரீதியாயுமுள்ள இக்காரியத்தைச் செவ்வனே நடத்துவதற்கு பொருள்தானமும், விஷயதானமும் செய்யும் வேதாபிமானமுள்ள தர்மிஷ்டர் அனந்தம்பேர் தேவையென்பது சொல்லாமலே விளங்கும்.

ஆதலால், கத்தோலிக்கு கிறீஸ்துவர்களே! தேவதாயின் சபையோர்களே! பரமநாயகியின் மக்களே! உங்களுடைய செல்வத்தாயின் தோத்திரத்தை எங்கும் பரப்ப உங்களுக்கு இதோ ஒரு வழி திறக்கப்பட்டிருக்கிறது! நமது தேசத்தில் இதுவரையில் எக்காலத்திலும் நடந்தேறியில்லாத மரியாயின் மகா சங்கம் நமது மத்தியில் மகா சிறப்பு செல்வாக்குடன் நடைபெறவும், அச்சங்கத்தின்மூலமாய் நமது அஞ்ஞான நாட்டில் கத்தோலிக்கு திருச்சபைக்கு வெற்றியும் மகிமையும், பேரும் பிரக்கியாதியும் உண்டாகவும், இந்திய கத்தோலிக்கர் தங்களுக்குள் பிளவும் பிரிவினையும் போக்கி, ஒற்றுமையையும் பிறர் சிநேகத்தையும் கைக்கொண்டு, ஒழுங்குடன் ஒத்து உழைக்கவும், இத்தேசத்திலுள்ள கோடிக்கணக்கான அஞ்ஞானிகளுக்கு மரியாயின் சங்கம் அருணோதயம்போல் உதித்து, ஞான சூரியனாகிய உலக இரட்சகரின் தெய்வீக மகிமையின் சோதியை அவர்களுக்குக் காட்டவும், இவை முதலான அரும் பெரும் நன்மைகள் அச்சங்கத்தால் விளையும்பொருட்டு, ஓ! மரியாயின் தாசர்களே! பரமநாயகியின் பக்தர்களே! சளையாமல்—சோம்பாமல் உற்சாகமாய் உழைக்க முந்துங்கள்! முந்துங்கள்!!

S. M.

[நமது நண்பர் பிரேரிக்கும் விஷயம் மிக்க அவசியமானதும், மரியாயின் மகா சங்கம் நன்கு நடைபெறவேண்டுமென்று விரும்புபவர்களால் பெரிதும் கவனிக்கப்படத்தக்கதுமானதென்று சொல்லத்தேவையில்லை. ஆங்கிலம் அறியாத பெரும்பான்மைக் கத்தோலிக்கர்களுக்கு மரியாயின் சங்கமென்றால் என்னவென்றே தெரியாதிருக்கலாம். அதன் கருத்து, பிரயோஜனம், அது நடத்தப்படப்போகிற வகைவிதம், மேரை மரியாதை, சீர் சிறப்பு, அலங்காரம் ஆடம்பரம், அருமை பெருமை, மாட்சி மகிமை முதலிய விவரங்களை கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் அனைவரும் அறிவது அவசியமாகும். ஆயினும், மரியாயின் மகா சங்கத்தின் முக்கிய விவரங்களைச் சுருக்கி யெழுதினாலும் அதை நாலைந்து சுதேச பாஷைகளில் அச்சிடுவதும், அவ்வாறு அச்சிடப்பட்ட துண்டுப் பத்திரங்களை நாடெங்கும் வழங்குவதும் இலேசான காரியங்களல்ல. அதற்குப் பெருந் தொகை வேண்டும். இவ்விஷயத்தை ஷை சங்கத்தின் பிரசுரக் கமிட்டியார் கவனித்து வேண்டுவன செய்தல் முறைமையாகும்.—பத்திராதிபர்.]

["நிகழ்கால சத்தியம்" அடுத்த மாத சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். ப—ர்.]

நமது சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு

1920ஸு செப்டம்பர்மூ முதல் தேதியா கிய இன்றுமுதற்கொண்டு உள் நாடுகளுக்கும் இலங்கைக்கும் அனுப்பப்படுகிற வி. பி. பார்சல்களும், பத்திரிகைகளும், பாக்கட்டுகளும் ரெஜிஸ்டர் செய்யப்படாமல் ஏற்றுக்கொள்ளப்படாதென்று சர்க்கார் அறிக்கை வெளியாயிருக்கிறது. இவ்வறிக்கையினுல் பத்திரிகை பிரசுரிப்பவர்களுக்கும், பத்திரிகாபிமானிகளுக்கும் முறையே ஒரு சிறிது அசௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அசௌகரியப்படி இம்மாத "நல்ல ஆயன்" சஞ்சிகையை வி. பி. மூலமாய் அனுப்பித் தங்கள் நிலுவை சந்தாவை வசூலித்துக்கொள்ளும்படி எமக்கு அறிவித்திருந்த நேயர்களனைவரும் ரெஜிஸ்டர் சார்ஜ் அணு 2 அதிகமாய்க் கொடுக்க நேரிட்டிருக்கிறதே. இச்செலவை ஒருவாறு தடுக்க எம்மிடமிருந்த பழய சஞ்சிகைகளையெல்லாம் இன்றைக்கு முந்தியே அன்னேர்களுக்கு வி. பி. மூலமாய் அனுப்பலானேம். இனி மேற்பட வி. பி. மூலமாய் அனுப்பும்படி எமக்கறிவிப்பவர்களுக்கு ரெஜிஸ்டர் சார்ஜ் அணு 2 அதிகமாகுமென்றறியவும்.

MISCELLANEOUS NEWS & NOTES.

பற்பல சமாசாரங்களும் குறிப்புக்களும்.

சுகவிதி நான்கு.—உன் தேக சுகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானுல் நீ அநுசரிக்கத்தக்க விசேஷ விதிகள் பின் வருவனவாகும் :–(1) சிரசைக் குளிர்ச்சியாய் வை. (2) பாதத்தைச் சூடாக வை. (3) இராப்போஜனத்தை மட்டாய்ச் சாப்பிடு. (4) அதிகாலையில் எழுந்திரு.

அடுத்த இராஜப்பிரதிநிதி ஸ்தானத்துக்கு அருகராகச் சொல்லப்பட்ட பேர்கள் ஏற்கெனவே அறுவர் இருக்க, இப்போது இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மாண்டேகுவை அப்பதவிக்கு நியமிக்கப்படப்போவதாக ஒரு வதந்தி யுலாவுகிறது.

ராவ்சாகேப் குருஸ் பேர்னான்டஸ் அவர்கள்.—தூத்துக்குடி சேர்மென் என்னுந் தரப்பில் இக்கனவான் செய்துள்ள நல்ல வேலைகளை மதித்து, அவருக்கு அவ்வூர் பருத்தி வியாபாரிகளால் ஒரு தங்கச் சங்கிலியும், தங்கப் பதக்கமும் சன்மானமாக அளிக்கப்பட்டனவெனக் கேள்வியுற்று சந்தோஷிக்கிறேம்.

சம்பள உயர்வு.—கவர்ண்மென்ட் ஆபீசுகளிலுள்ள நடுத்தர உத்தியோகஸ்தர்களுக்குப் பின்வருமாறு சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்று கவர்ண்மென்டு உத்தரவு பிறந்திருக்கிறது :—

ரூ-	33லிருந்து	60வரையில்	நூற்றுக்கு	30	வீதம்.
,,	60 ..	100 ,,	ஷ	25	,,
,,	100க்குமேல்	200 ,,	ஷ	20	,,
,,	200 ,,		ஷ	15	,,

வேலூரில் ஜில்லா கோர்ட்டு.—இந்த செப்டம்பர்மாத முதற்தேதி முதற்கொண்டு வேலூரில், டிஸ்டிரிக்ட் அன்ட் செஷன்ஸ் கோர்ட்டு என்னும் ஜில்லா கோர்ட்டு ஸ்தாபிக்கக் கவர்ண்மென்டார் உத்தரவு அளித்திருக்கிறுர்கள். சித்தூரிலிருந்த டெம்பரெரி சப்கோர்ட்டும், டெம்பரெரி அடிஷனல் சப்கோர்ட்டும், அந்தத் தேதியிலிருந்து எடுபட்டுப்போகும்.

கவர்ண்மேன்ட் பேன்ஷனர்களும் சட்ட சபையும்.—பென்ஷன் பெற்ற கவர்ண்மென்டு உத்தியோகஸ்தர்கள், சட்ட சபை, லோகல் போர்டு இவைகளில் ஸ்தானம் பெறும் விஷயத்தில் அவர்களை "உத்தியோகஸ்தர்கள்" (Officials) என்று பாவிப்பதா, அல்லது "உத்தியோகஸ்தரல்லாதார்" (Non-Officials) என்று பாவிப்பதாவென்று கடந்த சட்ட சபைக் கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு, "பென்ஷனர்கள் உத்தியோகஸ்தரல்லாதாராகவே பாவிக்கப்படுவார்கள் என்றும், அவர்கள் சட்ட சபைக்காவது, ஜில்லா அல்லது தாலுக்கா போர்டுகளுக்காவது மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்படுவதில் கவர்ண்மென்டாருக்கு ஆட்சேபணையில்லை" என்றும் கவர்ண்மென்டார் தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

சங். பேர்ட்ராம் சுவாமிகள்.—திருச்சினுப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையின் மானேஜரும், சென்னை சர்வகலாசாலை அத்தியட்சகர்களில் ஒருவருமாகிய சங். சேசு சபை எப். பேர்ட்ராம் சுவாமிகளுக்கு, ஷ சர்வகலாசாலையாரால் "எல். எல். டி" என்னும் கௌரவ வித்தியாபட்டம் கொடுக்கப்பட்டதைக் குறித்து நாம் பெரிதும் சந்

தோஷங்கொள்ளுகிறோம். இந்த நல்ல குருவானவர் வித்தியா விஷயங்களில் வெகுவாய் ஊக்கங்கொண்டு உழைப்பவர். இவருக்கு ஷை கௌரவப்பட்டம் அளிக்கப்பட்டதானது அனைவோருக்கும் அங்கீகாரமான விஷயமென்பதில் ஐயமில்லை. இவருக்கு எமது மனமார்ந்த சுபசோபன வாழ்த்துதல் கூறுகிறோம்.

வேலை நிறுத்தங்கள்.—சென்னையிலுள்ள பல அச்சியந்திரச்சாலைகளின் தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ் செய்திருக்கிறார்கள். கவர்ண்மென்ட் பிரஸ், ஹோ அண்டு கம்பெனி பிரஸ் முதலிய பெரிய அச்சியந்திரசாலைகள் ஐந்து மூடப்பட்டிருக்கின்றன. உணவுப் பொருள் முதலியவைகளின் விலையேற்றத்தால் உண்டான கஷ்டத்தை முன்னிட்டு கேட்கப்பட்ட அதிக கூலி, சௌகரியங்கள் கொடுபடாமையால், வேலை நிறுத்தங்கள் நிகழ்கின்றன. நியாயமான பல விஷயங்களில் அதிக கூலி கொடுக்கவேண்டியதாய்த்தானிருக்கிறது. அதிக கூலி கொடுத்து, காகிதம், மை முதலிய சாமான்களுக்கு இரண்டு மூன்று பங்கு அதிக கிரயம் கொடுத்து வாங்கி அச்சிடப்படும் பத்திரிகை, புத்தகம் முதலியவைகளுக்கும் கிரயம் அதிகப்படுத்துவது ஞாயமன்றோ? இதை அனேகர் கவனிக்கிறதில்லை. பழய மாமூலாகவே இருக்கவேண்டுமெனச் சாதிக்கிறார்கள்.

அர்ச். ஜான் தார்க்கம்மாள்.—பிரான்சிலுள்ள ரூவன் என்னும் பட்டணத்தில் பிறந்த இந்த அம்மாளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அளிக்கப்பட்டதை முன்னிட்டு அவ்வூரார் சமீபத்தில் சந்தோஷங்கொண்டாடினார்கள். பிரான்சியரும், ஆங்கிலேயருமாக ஒருமித்து, அரிய குணங்கள் படைத்து தேசநன்மைக்காக உழைத்த அந்த அர்ச்சியசிஷ்டவளை அநியாயமான மரணத்தீர்வைக்குக் கையளித்ததற்காக இரு தேசத்தாரும் அநுதாபப்பட்டு, நிந்தைப்பரிகாரஞ் செய்தார்கள். ரூவன் அதிமேற்றிராணியார் திவ்ய பலிபூசைசெய்து ஒப்புக்கொடுக்க, அந்த அர்ச்சியசிஷ்டவள் பிரான்சிய யுத்தத்தில் பிடித்திருந்த துவஜத்தை வைத்து பூஜிதஞ் செய்தார்கள். அர்ச்சியசிஷ்டவள் சிறையுண்ட இடம், எரியுண்ட ஸ்தம்பம் முதலியவற்றைக்கண்டு அவைகளையும் பூஜித்தார்கள். இதுவுமன்றி இந்த அர்ச்சியசிஷ்டவளின் சித்திரப்படத்தை அமைத்து, ஒரு தபால் முத்திரை (ஸ்டாம்பு) அச்சிடுவித்து வழங்கப்போவதாகவும் வதந்தி.

வேல்ஸ் இளவரசர் விஜயம்.—அடுத்த குளிர் காலத்தில் நமது மகிமைதங்கிய பட்டத் திளங்குமாரர் சென்னைக்கு விஜயஞ்செய்வாரென்றிருந்த எண்ணம் நிறைவேறப்போகிறதில்லை என அறிகிறோம். ஏற்கெனவே கானடா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களுக்கு விஜயஞ்செய்து, தேக அலுப்புற்றமையால், அதன் தொடர்ச்சியாகவே இந்நாட்டினுக்கும் வந்து, ஆங்காங்கு நடைபெறும் வரவேற்பு வைபவங்களுக்கு சமுகந்தந்து, அவை சம்பந்தமாய் நிகழும் அலுவல்களைக் கவனிக்குங்கால், அவருடைய தேகத்துக்கு ஒருகால் அசௌக்கியம் நேரிடலாமென டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டதின் பேரில், நமது இளவரசர் சுற்றுப்பிரயாணத்தை நிறுத்திக்கொண்டு, தம்மூருக்குச் சென்றுவிட்டார். இனி அடுத்த வருஷம் குளிர்காலத்துக்கு இந்நாட்டுக்கு வருவாரெனச் சொல்லப்படுகிறது.

கன்னாட்டுக் கோமகன்.—வேல்ஸ் இளவரசரால் திறக்கப்படவிருந்த புதிய இந்திய சட்ட சபை நமது சக்ரவர்த்தியவர்களின் சிறிய தந்தையாகிய மேன்மைதங்கிய கன்னாட்டுக் கோமகனால் திறக்கப்படுமென உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

இந்திய கவர்னர்.—வங்காள வாசியாகிய லார்டு சின்ஹ பிரபு அவர்கள் தமது ஜனன நாடாகிய பீஹார் ஒரிஸா மாகாணங்களுக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தியரில் கவர்னராய் நியமனம்பெற்றவர் இவர் ஒருவர்தான். இவர்தான் முதல் முதல் வங்காளத்தில் தலைமை நியாயாதிபதி ஸ்தானத்தையும், இந்தியா கவர்ண்மெட் நிர்வாக சபை அங்கத்தினர் ஸ்தானத்தையும், இங்கிலாந்தில் உதவி இந்தியா மந்திரி ஸ்தானத்தையும், லார்ட் சபையில் லார்டு அல்லது "பிரபு" என்னும் பட்டத்தையும் வகிக்கும் கௌரவம்பெற்றவர். இவர் மிக்க புத்திமானும், ஆழ்ந்த யோசனையுள்ளவருமாயிருப்பதினால்தான், இவருக்கு இத்தகைய உன்னத பதவிகள் அளிக்கப்பட்டன. இச்சங்கதியைக் கேள்விப்படும் இந்தியர் ஒவ்வொருவரும் சந்தோஷமும் மன ஆறுதலும் அடை

வாரென்பதிற் சந்தேகமில்லை. இவர் அடுத்த நவம்பர்மீ" த்தில் தமது கவர்னர் அலுவலை ஒப்புக்கொள்ளுவாரெனத் தெரிகிறது.

வெள்ளி ஜூபிலி.—பல்லாரி, அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் கன்னியர் மடத்தின் சிரேஷ்ட தாயார்மார்களாகிய சங். மேரி கிளாரம்மாளும், சங். மேரி ஆனம்மாளும் தாங்கள் துறவற அந்தஸ்தின் வார்த்தைப்பாடு கொடுத்த 25-ம் வருஷ ஜூபிலியை இம்மாதம் 9உ ஷெ மடத்தின் நண்பர்களும் அனுதாபிகளும் கொண்டாடப்போகிறார்களென்று கேள்வியுற்றுச் சந்தோஷிக்கிறோம். சங்கைக்குரிய இரு சிரேஷ்ட தாயார்மார்களுக்கும் எமது அன்பார்ந்த சுப சோபனங் கூறுவதுடன், அவர்களிருவரும் சர்வேசுரனுடைய மகிமைக்காகவும் ஆத்துமங்களின் இரட்சண்யத்துக்காகவும் பல்லாண்டு சீவித்திருந்து,தங்கள் தங்க, வைர ஜூபிலிகளைக் கொண்டாடும்படியாகவுங் கோருகிறோம்.

பரதர் மஹாநாடு.—பரத மஹாஜன சங்கத்தின் முதலாவது மஹாநாடு, எற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி சென்ற ஆகஸ்டுமீ" 5உ தூத்துக்குடியில் காப்டன் லெயோ எஸ். மச்சாது F.R.C.S., D.P.H., அவர்கள் அக்கிராசனத்தின்கீழ், மிக விமரிசையாய் நடத்தப்பட்டு, சித்திபெற முடிவடைந்ததென்று கேள்விப்பட்டுச் சந்தோஷமானோம். அம் மகா நாட்டார் கூடி யோசித்து முடிவு கட்டிய தீர்மானங்கள் முதலிய விவரங்கள் இன்னொரு பகுதியிற் காண்க. அர்ச். சவேரியாருடைய பேருதவியால் 400 வருஷங்களுக்குமுன்னேயே சத்திய கத்தோலிக்கு வேதத்திற் சேர்க்கப்பட்டு, கிறீஸ்துவ நாகரிகத்தை யடையப் பெற்ற பரதர் ஒற்றுமையினாலும், ஒரு பொதுச் சங்கத்தினாலும் அடையக்கூடிய நன்மைகளை யடையக் கருதாது இதுகாறும் வாளாவிருந்தது ஆச்சரியமே. ஆயினும், "எப்போதும் இல்லையென்பதைவிட காலந் தாழ்ந்தாவது செய்வது மேல்" என்னும் ஆங்கில முதுரைப்படி இனியாவது, அர்ச். பனிமயமாதாவின் அடைக்கலத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்தப் பரதகுலமக்கள் அவ்வாண்டவளின் சகாயத்தால் முன்னேறி நலம்பெற்று வாழவேண்டுமென விரும்புகிறோம்.

சர்வ தேச ஜன சங்கம்.— ஐரோப்பிய யுத்தத்திற்குப்பின் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் ஜனாதிபதியாகிய மிஸ்டர் வில்சன் முயற்சினால் ஏற்படுத்தப்பட்ட இந்த சங்கத்தின் முதற் கூட்டமானது அடுத்த நவம்பர்மீ" 15-ம் தேதி, சுவிட்சர்லான்டு தேசத்தின் ஜெனிவா நகரத்தில் மிஸ்டர் வில்சனால் கூட்டப்படுகிறது. இதில் எற்கெனவே 39 தேசங்கள் சேர்ந்திருக்கின்றன. அவை யாவன: கிரேட்பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜப்பான், ஸ்பேயின், பிரெசில், பெல்ஜியம், கிரீஸ் முதலியனவாகும். இச்சங்கத்தில், நேசகட்சியாரோடு எதிர்த்துச் சண்டையிட்ட சத்துரு தேசங்களை இதுவரையில் சேர்க்கவில்லை. அவைகளைச் சேர்ப்பதோ அல்லவோ என்பது முதலிய விஷயங்கள் இந்த கூட்டத்திற்றான் தீர்மானிக்கப்படும். இக்கூட்டத்துக்கு ஷெ 39 நாடுகளிலிருந்தும் ஒவ்வொரு நாட்டிற்கு மும்மூன்று பிரதிநிதிகள் வரவழைக்கப்படுகிறார்கள். மூன்று பேர் வந்தாலும் தீர்மானிக்கப்படுகிற விஷயங்களின்பேரில் ஒரே வாக்குத்தான் கொடுக்கவேண்டுமாம். இனி உலகமெங்கும் சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கு இப்படிப்பட்ட சங்கமொன்று அவசியந்தானென்று நமது பாப்பரசர் அபிப்பிராயப்படுகிறார்.

அயர்லாந்தில் கலகம்.—சுய ஆட்சி வேண்டுமென்று முரண்டு பண்ணிக்கொண்டிருக்கும் ஐரிஷ்காரர்களுக்கு, ஒருவாறு திருப்தியுண்டாக்க "அயர்லாந்து ஒழுங்கு முறைச்சட்டம்" என்ற ஒரு மசோதா சட்டம் பார்லிமென்ட் சபையில் கொண்டுவரப்பட்டு, இரண்டாவது முறையும் வாசிக்கப்பட்டு நிறைவேறியபோது, ஐரிஷ் மெம்பராகிய மிஸ்டர் கார்லைல் என்பவர் "இந்த மசோதாவைச் சட்டமாக்கினால், நீங்கள் அயர்லாந்தைக் கொல்லப்போவதில்லை, ஆனால் இங்கிலாந்தையே கொல்லப்போகிறீர்கள்" என்று உரக்கச் கூச்சல்போட்டுவிட்டு, வெளியே சென்று விட்டனராம். ஐரிஷ்காரர்கள் தங்களுக்கு சுய ஆட்சி வேண்டுமென்று வெகுவாய்க் கலகம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஸ்வான்ஸி யென்னும் போலீஸ் இன்ஸ்பெக்டர் கோவிலிலிருந்து வெளியே வரும்போது, கலகக்காரர்கள் ஐந்து பேர் அவரைக் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு,

மோட்டார் வண்டியிலேறித் தப்பியோடிவிட்டார்கள். இம்மாதிரி கொல்லப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர்கள் சென்றமீத்தில் மாத்திரம் 7 பேராம்; ஜனவரிமாத முதற்கொண்டு 65 பேராம். ஷெ ஸ்வான்ஸி கொல்லப்பட்டதை முன்னிட்டு கோபங்கொண்ட ஜனங்கள் அங்கிருந்த கத்தோலிக்கர் வீடுகளைக் கொள்ளையிட்டு, அவைகளுக்குத் தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள். முகமூடி போட்டு ஆயுதந் தாங்கிய சின்பீனர்கள் அயர்லாந்திலுள்ள பிரவின் ஹெட்கோஸ்ட் கார்ட் என்னும் ராணுவஸ்தலத்தைக் கொளுத்திவிட்டார்கள். கத்தோலிக்கருக்கும் புரொடஸ்டான்டாருக்கும் ஏற்பட்டிருக்கும் இந்தக் கலகத்தை யொழித்து, அவர்களுக்குள் சமாதானத்தை ஸ்தாபிக்கும்படி சர்வேசுரன் கிருபை புரிவாக!

புத்தக வரவு.—யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கொலம்போகாமிலுள்ள, கைத்தொழிற் கல்லூரி அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்ட "பாலபோத வாசனம், ஆரும் புத்தகம்" எனப் பெயர்பூண்ட வாசகப் புத்தகமொன்று அதன் ஆக்கியோனல் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதை வாசித்தபோது நமக்கு உண்டான ஆறுதலும் சந்தோஷமும் கொஞ்சமல்ல. அதில் பாலர்கள் அறியவேண்டிய அனேக விஷயங்கள் எளிய நடையில் இனிமையாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இதை வாசிக்கும் வாலர்கள் மனத்தில் தெய்வபக்தியும், நல்லொழுக்கமும், பசுமரத்தாணிபோற் பதியுமென்பதற் கையமில்லை. இத்தகைய புத்தகம் ஒன்று நம் பள்ளிச் சிறுர்களுக்கு அவசியமென நாம் நெடு நாளாய் உணர்ந்துவந்தோம். அந்த விஷயம் இப்போது பூர்த்தியாய்விட்டதென்பதே நமது சந்தோஷத்துக்குக் காரணமாகும். இவ் வரிய புத்தகமானது இம்மாகாணத்தின் பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றிலும் பாடபுத்தகமாக உபயோகிக்கப்படவேண்டுமென்று நாம் பெரிதும் விரும்புகிறேம். இதன் ஆக்கியோன் இந்தச் சென்னை இராஜதானியின்கண்ணுள்ள கல்லூரித் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாதிரிப் புத்தகத்தையாவது அல்லது அதை விளக்கிக்காட்டும் துண்டுப் பத்திரத்தையாவது அனுப்புவாரானல், அவர்கள் அதன் நன்மையைக் கண்டுணர்ந்து தங்கள் கல்லூரியிலும் அதனை உபயோகிக்க ஹேதுவாகும்.

இந்தியமேற்றிராணிமார்கள்.—சமீபத்தில் நமது பரிசுத்த தந்தையாகிய 15ம் ஆசீர்வாதப்பர் எழுதிவிடுத்த நிருபத்தின் தாற்பரியப்படி, இந்தியரில் மேற்றிராணிமார் உடனே நியமிக்கப்படவேண்டுமென்று பலமாய் வாதிக்கும் கட்சி இத்தென்னிந்தியாவில் ஒன்றுண்டு. இந்திய மேற்றிராணிமார் இப்போது நியமிக்கப்படவே கூடாதென்று வாதிக்குங் கட்சியும் ஒன்றுளது. இவை இரண்டு கட்சிகளில் ஒன்று சரி, மற்றென்று சரியல்லவென்று சொல்வது நமது கருத்தல்ல. எவரெவர்களுக்கு எவ்வித அபிப்பிராயம் ஏற்படுகிறதோ அதை அவரவர்களும் வெளியிடுவது தப்பிதமாகாது. ஆயினும், அவ்விஷயத்தைப்பற்றி ஒரு கட்சியார் மற்ற கட்சியினரை வாயில் வந்தவாறு பேசுவதும் ஏசுவதும் பிசகாகும். அவரவர்களுடைய அபிப்பிராயங்களை ஞாய வரம்புக்குட்பட்டு அதிகாரிகளுக்குவிண்ணப்ப மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டுமே யொழிய இவ் விஷயங்களைப்பற்றி கத்தோலிக்கு வேதத்தையநுசரிக்காத இலௌகிகப் பத்திரிகைகளுக்கு எழுதி, அங்கு தர்க்கஞ்செய்வது கத்தோலிக்கர்களுக்கு அழகல்ல. அப்பேர்க்கொத்தவர்கள் திருச்சபை அதிகாரிகளின் மனஸ்தாபத்துக்கு ஆளாவார்கள். இந்திய மேற்றிராணிமார் நியமனத்தைப்பற்றி ஆங்காங்கே நிகழும் குழப்பக் கூட்டங்கள், கிளர்ச்சிகள் நடத்தப்படக்கூடாதென்று பெங்களூரிலுள்ள நமது மேன்மைதங்கிய பாப்பு ஸ்தானதிபதியவர்கள் திருச்சினப்பள்ளி மேற்றிராணியாண்டவரவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறுர்கள். இதை நமது நண்பர்கள் கவனிப்பார்களெனக் கோருகிறேம்.

கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிகளில் வைத்தியம்.—சென்னையிலுள்ள கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிகளில், ஐவேஜ் உள்ளவர்களுக்கு, அதாவது தங்கள் இல்லத்திலேயே டாக்டர்களை வாவழைத்து சிகிச்சை செய்துகொள்ள சக்திபுள்ளவர்களுக்கு, வைத்தியம் செய்தல் கூடாது என்ற ஒரு உத்தரவு சமீபகாலத்தில் பிறப்பிக்கப்பட்டது. அவ்வுத்தரவை ரத்து செய்யவேண்மென்று, கனம் சிவராவ் அவர்கள் சென்ற மாதம் 18-ம் தேதி சென்னையில் கூடிய சட்டசபைக் கூட்டத்தில் ஒரு பிரேரணை கொண்டுவர, அது பெரும்பான்மையோரால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, இனி

கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிகளில் முன்போலவே, தனிகர், தரித்திரர் எனுந் தாரதம்மியம் பாராமல் சகலருக்கும் சமரசமாய் சிகிச்சை செய்யப்படும்.

குதிரைக்குப் பாதரட்சை.—குதிரைக் கால்களுக்கு இரும்பு லாடமடித்து அவைகள் காயப்படாமல் காப்பாற்றப்பட்டுவருகிறது இந்நாட்டிலும் இன்னும் இதர நாட்டிலுமுள்ள வழக்கம். இப்போது அமெரிக்காவிலே குதிரைகளுக்கு லாடமடிப்பதைவிட ரப்பரினுலே சப்பாத்து செய்து போடுவது அதிக உத்தமமானதென்று ஒரு குதிரை வைத்தியர் கண்டுபிடித்திருக்கிறாராம். இது ஒரு நல்ல காரியந்தான். ஆனால் ரப்பர் போடப்பட்ட சக்கர வண்டிகள் ரஸ்தாக்களில் வந்தால், அவைகளின் சத்தம் வழிப்போக்கர்களுக்குச் சரியாய்க் கேட்கிறதில்லை. குதிரைக் காலடிச்சத்தம் மாத்திரம் "டக்" "டக்" என்று கேட்கும். குதிரைக் கால்களுக்கும் ரப்பர் பாதரட்சை போட்டுவிட்டால், தெருக்களில் வண்டிகள் ஓடும் சத்தமே காதில் விழாது. பாதசாரிகளுக்கு அதிக ஆபத்துக்கள் நேரலாம். ஆனால் ரஸ்தாக்களில் சப்தம் மட்டுப்பட்டுப் போம்.

ஜல விபத்து.—பம்பாயில் அமெரிக்க மிஷன் போர்டிங் பள்ளிக்கூடத்து வாலிபப் பெண்கள் 63 பேர்களும், 31 சிறுவர்களும் அந்தந்த உபாத்தியாயினிமார்களோடு பொழுதுபோக்குக்காக மஹீம் என்ற விடத்திலுள்ள கடற்கரைக்குச் சென்ற விடத்தில், அங்கு ஜலத்திலிறங்கி விளையாடிக்கொண்டிருக்கையில, 11 பெண்களும், ஒரு சிறுவனும் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு மணல் மேட்டுக்குச் சென்றனர். அலைகள் வேகமாய் அடித்ததனுல் அங்கிருந்து கரைக்குத் திரும்பமுடியாமல் அவர்கள் ஜலத்தில் மூழ்கியிறந்தார்கள். பரிதாபம்! "நீர் விளையாடேல்" என்னும் ஔவையார் கூற்றை அநுசரிக்காமையால் வந்த கெடுதி இது. போர்டிங் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு இந்த விபத்து ஒரு படிப்பினையா யிருக்கட்டும்.

கொழும்பு சர்வகலாசாலை.—கொலம்போ யூனிவெர்சிடி யென்னும் சர்வகலாசாலை, அடுத்த ஜனவரிமீ த்தில் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

ஓர் வேண்டுகோள்.

அச்சு சாமான்கள், பிரசுரக் கூலி முதலியன அபாரமாய் அதிகரித்திருப்பதின் நிமித்தம் நாம் "நல்ல ஆயன்" பத்திரிகையில் இதுகாறும் பிரசுரித்துவந்த "அர்ச். அடைக்கலமாதா கோவில் கட்டிட" தருமத்தை இனிமேலும் பிரசுரித்துவர எமக்குச் சௌகரியப்படவில்லை. ஆனதினால், அடைக்கல அன்னையின் பக்தர்கள் அனைவரும் கீழ் கண்ட விலாசத்திற்கு தங்களுடைய நன்கொடையை அனுப்பி அவ்வாண்டவளுடைய ஆலயம் முற்றும் முடிவுபெற எமக்கு உதவி புரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

யெஸ். டாமினிக் சுவாமியார், எலத்தகிரி,
வரட்டனபள்ளி போஸ்ட்,
சேலம் ஜில்லா.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

ஏனுஞ்சான்.

எனது அருமை மனைவி கித்தேரியம்மாள் கருப்ப வாதையினுல் இரண்டு நாள்வரையிலும் கடின அவஸ்தைபபட்டு பிறகு சிவில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டதின்பேரில், டாக்டருடைய சிகிச்சையினுல் தாய் வேறு குழந்தை வேறாயினர். ஆனால் சரியான கவனிப்பில்லாக் குறையால் ஜன்னியும் இசிவுங் கண்டு, சேசுக் கிறீஸ்துநாதருடைய ஐந்து திருக் காயங்களையும் நாள்தோறும் தியானித்துக்கொண்டுவரும் அன்பான எனது மனைவி தனது இருபதாம் பிராயத்தில் தனது தாயாரையும், ஐந்து சகோதரர்களையும், அருமைப் பத்தாவையும் பாதவிக்கவிட்டு 1920ஷு ஜனவரிமீ 5உ ஆகிய திங்கட்கிழமை மாலை 5 மணிக்குப் பரலோகப் பிராப்தியானுள். இதைக் கண்ணுறும் சகோதரர் சகோதரிகளே! மரித்த இவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. ஜெபிப்பீர்களாகவும்.

இங்ஙனம் மனைவியை யிழந்து பரிதவிக்கும்
P. அடைக்கலம்,
உபதேசியார்.

நன்மரண அறிக்கை

“என் நேசர்களே! நீங்களாவது என்பேரில் தயையாயிருங்கள்.’

திருமந்திரமாநகரெனச் சிறப்புற்றோங்கும் தூத்துக்குடியில், பரதகுல வம்சத்தின் முதன்மையான வக்கீலும், முயுனிசிப்பல் சேர்மனுமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் சவியேர் மோத்தா அவர்களின் இளைய புத்திரியும், மேற்படி யூர் வாசியும், இலங்கையின் பிரதான நகராகிய கொழும்பில், பரதகுலப் பிரபல வர்த்தகரில் சிரேஷ்டராய் விளங்கிக் காலஞ்சென்ற ஸ்ரீமான் எப். எக்ஸ். பெரைரா அவர்களின் சிரேஷ்ட புத்திரர் ஸ்ரீமான் ஐ. எக்ஸ். பெரைரா அவர்களின் அருமை மனைவியுமாகிய ஸ்ரீமதி மரிய மர்கரீத் மதலேன் காணிக்கையம்மாள் மோத்தா மோத்தா என்னும் மாதுசிரோமணி, கொழும்பைச்சேர்ந்த பம்பலப்பிட்டியில் இன்புளூவென்சா என்னும் விஷஜுரத்தின் வசப்பட்டு, ஒன்பது நாளாகச் செய்யப்பட்ட எவ்வித சிகிச்சைக்குங் குணப்படாமல், நமது தாயாகிய சத்திய திருச்சபையின் சுகிர்த முறைமைப்படிக் கடைசி தேவத்திரவிய அநுமானங்களைக் குறையறப் பெற்று, நாளது வருஷம் ஜுலைமீ 18உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணியளவில், இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகடைந்தனள்.

தான் கலியாணஞ்செய்த 12-வது வருஷத்தில் நடுப்பிராயமாகிய, 29 வயதில் தனது பிரிய பத்தாவையும், அருமையாகப் பெற்று வளர்த்த சிறிய மக்கள் ஐவரையும், அன்பான அன்னையையும், மற்றும் சகோதரர் பந்துமித்திரர் முதலானோரையும் இப்பூவுலகில் பரிதபிக்கவிட்டுப்போன பரிதாபமான இத் துக்க சம்பவத்தை வாசித்தறியும் சகோதர சகோதரிகளே! தயைகூர்ந்து இவ்வாத்துமம் நித்தியானந்த பாக்கியம் பெறும்படி பிரார்த்தித்துக்கொள்ளுங்கள்.

இவ்வாத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினல் சமாதானத்தில்
இளைப்பாறக்கடவது!